# அரசு ஊழியர்

மாத இதழ்

2022 நவம்பர்

மலர்:43 இதழ்:11

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:

மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



முகவரி:

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **பொறுமைகளின் எல்லை தகர்த்து நிகரில்லா நம் உரிமைகளை மீளப் பெறுவோம்!**
   *தலைவர் மடல் ................................4*

2. **மாண்புமிகு தமிழக முதல்வருக்கு திறந்த மடல்**
   பொதுச் செயலாளர் மேசையிலிருந்து...................................*7*

3. **பசி, பட்டினி இந்திய மக்கள் இறப்புரிமை?**....................*10*

4. **போராட்ட வாளேந்தி உரிமைக்கு தோள் கொடுப்போம்!** ..........................*12*

5. **வரலாற்று நாயகன் பிடல் காஸ்ட்ரோ**..................................*18*

6. **பிரிட்டன் புதிய பிரதமர் ரிஷி சுனக் 'இந்தியாவின் பெருமிதம்'?** ....................*20*

7. **விழிப்பாய் நாட்டை காப்போம்!**................*21*

8. **இனி சுயமரியாதையுடன் தலைமைச் செயலக சங்கம் ஜொலிக்கும்!** ............................*22*

9. **பெருந்தில் முறையீடு தமிழ்நாடு சாலை ஆய்வாளர் சங்கம்**.........*26*

10. **கல் உப்பா? அயோடின் கலந்த உப்பா? எந்த உப்பை பயன்படுத்துவது?**...............*27*

11. **அகவை அறுபது! "ஊடக உலகில் உரிமையின் போராளி" தீக்கதிர் நாளிதழ்**...*29*

12. **யாதுமாகி நிற்பாய் தோழி!**.....................*31*

13. **உரிமைகள் கனிவது இனியும் தடையானால் உடைத்தெறிவோம் நம் பொறுமைகளை!**...*32*

தலைவர் மடல்

# பொறுமைகளின் எல்லை தகர்த்து நிகரில்லா நம் உரிமைகளை மீளப் பெறுவோம்!

சில நேரங்களில் நாம் நினைத்தபடி நடக்க வேண்டிய விஷயங்கள் சரியாக நடக்காத போது, நாம் கஷ்டப்பட்டுச் செல்லும் சாலை செங்குத்தான மலைமீது ஏறுவதாக தோன்றும்போது, நம் கையில் பணம் குறைவாக இருந்து கடன்கள் அதிகமாக இருக்கும்போது, நாம் புன்னகைக்க விரும்பி அது முடியாமல் போய் பெருமூச்சு விடுகிறபோது, கடமையும், பொறுப்புணர்ச்சியும் நம்மை கசக்கிப் பிழியும்போது – - தேவைப்பட்டால் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்ளலாமே தவிர முயற்சியை மட்டும் எப்போதும் விட்டுவிடக்கூடாது என்பது வெற்றிபெற்ற அறிஞர்களின் வாக்கு.

நாட்டில் அபார தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்கிறார்கள், பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற்றமடைந்து வருகிறது என்கிறார்கள். ஐடி தொழில் துறையில், விண்வெளி தொழில் நுட்பத்தில், பல்வேறு ஆராய்ச்சிகளில் இந்தியா வியத்தகு வளர்ச்சி அடைந்து வருவதாக மத்திய அமைச்சர்களும் அதிகாரிகளும் தெரிவிக்கிறார்கள். ஆனால் நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆகிய பிறகும் ஏழை எளிய மக்கள் குறைந்ததாக தெரியவில்லை. வறுமை நிலையில் தள்ளப்படுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருவதாகத்தான் செய்திகள் வருகின்றன. விண்ணை கிழிக்கும் வேகத்தில் விஷம்போல் ஏறிச்செல்லும் விலைவாசியை இந்த தொழில் நுட்பங்களால் குறைக்க முடியவில்லை. என்னதான் அதிநவீன தொழில்நுட்ப வளர்ச்சியை இவ்வுலகம் கண்டிருந்தாலும் ஒவ்வொரு வேளை உணவிற்கும் கையேந்தி நிற்கும் மனித குலத்தின் அவல நிலை இன்னும் மாறவில்லை. இனி எத்தனை யுகங்கள் ஆனாலும் இது மாறப்போவதில்லை என்பது செல்வங்களை குவித்து வைத்திருக்கும் பணமுதலைகள் மற்றும் அதிகார வர்க்கங்களின் ஆணவத்திலிருந்து தெரிகிறது. நாகரீகம் தேவையில்லை முதலில் சகல ஜனங்களுக்கும் சோறு கண்டுபிடி என்று சொன்ன பாரதியின் வரிகள் இன்னும் சில நூறு ஆண்டுகளானாலும் பலிதமாகப்போவதில்லை என்பதைத்தான் இவை காட்டுகின்றன. இவற்றை மாற்றிக்காட்டிவிட வேண்டுமென்றுதான் நம்மைப்போன்ற அமைப்புகள் அரசாங்கங்களுக்கு எதிராக மக்களுக்கான உரிமைகளை உணவு, உடை, வாழ்விடங்களுக்காக போராடி வருகின்றன.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை 19 ஆண்டுகால பொறுமைகளை கட்டுக்கோப்பாக நாம் அடக்கி வைத்திருக்கிறோம். கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலேயே ஊதிய மாற்றம் மற்றும் ஊதிய முரண்கள் தொடர்பாக நாம் வைத்த கோரிக்கைகள் பலவும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே அடுத்த ஊதிய மாற்றம் 2016ல் நிகழ்ந்தது. அந்த ஊதிய மாற்றத்தை பெறுவதற்காக நாம் 21 மாதங்களாக போராடி வேலைநிறுத்தப் போராட்டம் வரை சென்று பிறகு அது நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு ஊதியமாற்றம் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றை இந்த உலகம் அறியும். ஊதிய மாற்றத்தில் ஏற்பட்ட குறைபாடுகளையும் 1.1.2016 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய மாற்ற நிலவைத் தொகையை வழங்க வேண்டி நாம் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத

நிலையில் அதற்கான போராட்டங்களையும் நாம் மேற்கொண்டோம். செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக புதிய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டுவந்த மாநிலம் தமிழகமாக இருக்கட்டும் என்று ஏற்படுத்திய புதிய ஓய்வூதியத் திட்டத்தை நாம் 2003ம் ஆண்டிலிருந்து இன்றுவரை எதிர்த்துத் கொண்டிருக்கிறோம். உரிமைக்காக போராடி வியர்வையும் உதிரமும் சிந்தி 1,86,000 பேரை ஒரே அரசாணையில் டிஸ்மிஸ் செய்த ஜெயலலிதா அரசை எதிர்த்து போராட்டம் நடத்தி உச்ச நீதிமன்ற தீர்ப்பின் வாயிலாக நீக்கப்பட்ட அனைவரும் திரும்பவும் பணியில் அமர்த்தப்பட்டதும், அரசு ஊழியர்களை வஞ்சித்த ஜெயலலிதா அரசை அடுத்த தேர்தலிலேயே வீட்டுக்கு அனுப்பியதையும் நாம் செய்து காட்டி பகை முடிக்கும் பணி முடித்தோம்.

ஆசிரியர்கள் வேலை ஏதும் செய்யாமலேயே சுளையாக ஐம்பதாயிரம் சம்பளம் வாங்குவதாகவும், அரசு ஊழியர்கள் அரசு கஜானாவின் நிலை உணரந்தும் வேலை நிறுத்தம் செய்வதாகவும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை கேவலமாக விமர்சித்த எடப்பாடி பழனிச்சாமி அவர்களையும் நடந்து முடிந்த தேர்தலில் வெறிகொண்டு பழிதீர்த்தோம்.

இருப்பினும் சென்ற பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தலில் நம்முடன் நின்று நமக்காக அறிக்கைகள் விட்டதோடு மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று சொன்ன திமுக தலைவரும் அன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாய் ஆகிவிட்ட நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதிகளை இன்னமும் நிறைவேற்றாமல் உள்ளது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் எடப்பாடி திரு. பழனிச்சாமி அவர்கள் பேசியதைப்போலவே இந்த திமுக ஆட்சியில் அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியும் சம்பள உயர்வும் அளிப்பது சமூக அநீதி என்று தன்னுடைய கார்ப்பரேட் விசுவாசத்தைக் காட்டியுள்ளார். அவர் சொன்ன வார்த்தைகளை திரும்பப் பெற வேண்டும் என்று நாம் ஒரு ஊழியர் சந்திப்பு பிரச்சாரம் நடத்தி உரியதொரு எதிர்வினையாற்றினோம். அதன்பிறகு ஜூலை 2ஆம் நாள் எழுச்சிநாள் கருத்தரங்கம் நடத்தி தமிழக அரசின் கவனத்தை ஈர்த்தோம். சென்ற வருடம் ஆகஸ்ட் 25ஆம் தேதி கோட்டை நோக்கி பேரணி நடத்தி நம்முடைய நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்றிட முதல்வரிடம் முறையிட இயக்கம் நடத்தினோம். அதனுடைய நீட்சியாக ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் பெயரில் அனைத்துத் துறை போராட்டக்குழுவின் தலைவர்கள் முதல்வர் முன்னிலையில் மேடையேறி தங்கள் கோரிக்கைகளை வாசித்தளித்து முதல்வரின் மௌனத்தை கலைத்ததோடு, ஏற்கெனவே நம்முடைய 14ஆம் மாநில மாநாட்டில் ஆட்சியாளர்களை திரும்பிப் பார்க்க வைப்போம் என்று சூளுரைத்ததை ஜாக்டோ ஜியோ மாநாட்டில் முதல்வரை திரும்பி பார்க்க வைத்ததோடு மட்டுமல்லாமல் லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கூடியிருந்த கூட்டத்தில் திமுக அரசமைக்க காரணமாக இருந்தவர்கள் நாம் என்பதை முதல்வர் தன் வாயாலேயே கூற வைத்ததோடு நம்முடைய கோரிக்கைகளை தான் மறுக்கவில்லை என்றும் மறக்கவில்லை என்றும் மறைக்கவும் இல்லை என்றும் கூற வைத்து கோரிக்கைகளை முதல்வரின் வாய்மொழி மூலம் புதுப்பித்திருக்கிறோம். இப்போது கூறியுள்ள உறுதிமொழி முதல்வரால் கூறப்பட்டுள்ள உறுதிமொழியாகும். தீவுத்திடலில் தமிழக முதல்வர் எந்த கோரிக்கை குறித்தும் அறிவிப்பு

வெளியிடாமல் போயிருந்தாலும் நம்முடைய நிலுவை கோரிக்கைகளை உறுதிபடுத்தி உயிர்பித்துள்ளார் நமக்கு கிடைத்துள்ள நம்பிக்கை செய்தியாகும்.

இதுகாலம் வரை நாம் பொறுமையுடன் காத்திருந்தது அரசின் நிதி நெருக்கடி மற்றும் கொரோனா பாதிப்புகளில் இருந்து தமிழகம் மீண்டுவர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்தானே தவிர உரிமைகளை கேட்பதில் எந்தவித பயமோ தயக்கமோ நாம் எப்போதும் கொண்டது கிடையாது. இப்போது தீவுத்திடல் மாநாட்டில் முதல்வர் கண்டிப்பாக நமது கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என உறுதிமொழி அளித்துள்ள நிலையில் நாம் இப்போது அடுத்த கட்ட நகர்விற்கு அடியெடுத்து வைத்துள்ளோம். அதனால் 2024ஆம் ஆண்டு வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல்வரை இனி நாம் பொறுமை காக்க வேண்டிய அவசியமில்லை. இனி போராட்டகளம் நம் கையில். உரிமைகளை மீட்டெடுக்கும் வரை ஓய்வறியா போராட்டங்கள் தான் நமக்கிருக்கும் ஒரே வழியாகும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டிற்குப் பிறகு யாருமே எதிர்பாராத வகையில் 14 சதவீத அகவிலைப்படி உயர்வைப் பெற்றோம். அதன்மூலம் அரசின் கஜானாவிலிருந்து 1946 கோடியை பெற்றுள்ளோம். இந்த உரிமை அரசால் வழங்கப்பட்டது என்பதை விட நம்முடைய தொடர் இயக்கங்களின் மூலம் அரசின் கரங்களிலிருந்து பறிக்கப்பட்டது என்று கூறுவதே சரியானதாக இருக்கும். அதேபோல ஜாக்டோ ஜியோ மாநாடு நடத்திய போதும் 3 சதவீத அகவிலைப்படி உயர்வை பெற்றோம். நூறு சதவீதம் நாம் நம்முடைய உரிமைகளை அடையவில்லை என்றாலும் கிடைத்திருக்கின்ற உரிமைகள் அனைத்தும் நம்முடைய தொய்வில்லாத தொடர் இயக்கங்கள் மற்றும் போராட்டங்களால் கிடைத்தவையாகும். அதுபோல இப்போது நடைபெறும் நம்முடைய பிரதிநிதித்துவ மாநாட்டின் மூலமாகவும் அரசிற்கு அழுத்தம் கொடுத்து நம்முடைய உரிமைகளை நாம் பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மீண்டும் மீண்டும் பொறுமை காத்தால் நாம் பொங்கி எழ வேண்டிய சூழலில்தான் உள்ளோம்.

நம்முடைய ஒவ்வொரு இயக்கமும், ஒவ்வொரு போராட்டமும் நம்முடைய இருப்பை நிலைநிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பது ஆகும். நாம் அனைவரும் நம்முடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறோம். அந்த சக்தி பெரு நெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்வார்கள். எனவே பொறுமைகளின் எல்லை தகர்த்து நிகரில்லா நம் உரிமைகளை மீளப் பெறுவோம். ●

## சூடா ஒரு கோப்பை சூப்

### தலைவர்கள்!

இந்த நாட்டில்
நடிப்பவர்கள்
தலைவராகிறார்கள்
அல்லது
தலைவர்களாக
இருப்பவர்கள்
நடிக்கிறார்கள்.

தமிழா விழித்துக்கொள்
இல்லையென்றால்
வெள்ளித்திரைக்கென்று
உன் வேட்டியை
உருவிக்கொண்டு
சென்றுவிடுவார்கள்!

– கவிக்கோ அப்துல் ரகுமான்

# மாண்புமிகு தமிழக முதல்வருக்கு திறந்த மடல்

ராஜஸ்தான், சத்தீஸ்கர், இமாச்சல பிரதேசம், பஞ்சாப் மாநிலங்கள் தங்களது ஊழியர்களுக்கு புதிய பென்சன் திட்டத்தை கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தினை அமல்படுத்தியுள்ளனர். அவ்வாறே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் பழைய பென்சன் திட்டத்தை தமிழ்நாட்டிலும் அமல்படுத்திட வேண்டும்.

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோரிக்கை:**

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 01-04-2004 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய ஓய்வூதிய (பங்களிப்பு ஓய்வூதியம்) திட்டத்தை ரத்து செய்து விட்டு, ஏற்கனவே நடைமுறையில் இருந்த பழைய ஓய்வூதிய (பயனளிப்பு ஓய்வூதியம்) திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி 19 ஆண்டுகளாக தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போராடி வருகிறது.

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து விட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி 2016 ஆம் ஆண்டில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நடத்திய வீரம் செறிந்த காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு சட்டமன்றத்தில் புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து விட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வழிவகைகளை ஆராய வல்லுநர் குழுவை அமைத்தது. பல்வேறு மாற்றங்களுக்கு மத்தியில் அக்குழுவின்அறிக்கை தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 2016 ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, தனது அறிக்கையினை அரசுக்கு அளித்திடவும், அதன் மீது அரசு தனது முடிவை தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே நடைபெற்ற போராட்டங்களின் நிர்பந்தம் காரணமாகவே, வல்லுநர் குழு அறிக்கை நவம்பர் 2018 ல் அரசுக்கு அளிக்கப்பட்டது. அதன் மீதான அரசின் முடிவு இதுநாள் வரை வெளியிடப்படவில்லை. வல்லநர் குழு அறிக்கையையும், அதன் மீதான அரசின் முடிவும் அறிவிக்கப்படாத நிலையில் அன்றைய முதலமைச்சர், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்ய முடியாது என்று சட்டத்திற்கு புறம்பாக அறிவித்தார். வல்லுநர் குழு அமைக்கப்பட்டதே அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோபத்தை திசை திருப்புவதற்கே என்பது அரசின் அன்றைய அறிவிப்பின் மூலம் அறிய முடிந்தது. பழைய பென்சன் திட்டத்தை கொண்டுவருவதை ஊழியர்களின் சமூக பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையாக பார்க்காமல், அரசு ஊழியர்களின் பொருளாதார கோரிக்கைகளாக மட்டுமே பார்ப்பதால் இக்கோரிக்கை தீர்க்கப்படாமல் உள்ளது.

1991 ல் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயம், தனியார்மயம், உலகமய கொள்கைகளினால் உழைப்பாளி மக்களின் சமூகநல சேமிப்புகளின் மீது கார்ப்பரேட் கம்பெனிகள் கொள்ளை அடிக்க தாராளமாக அனுமதிக்கப்பட்டது. அத்தாக்குதல்களில் ஒன்றே பென்சன் தரும் நடைமுறையை மாற்றி, புதிய பென்சன் திட்டத்தை கொண்டுவந்து, பென்சனுக்காக வைக்கப்பட்டிருந்த Computed Fund ரூ.2 1/2 லட்சம் கோடி ரிலையன்ஸ் மற்றும் ICICI Lombard ஆகிய தனியார் கம்பெனிகளுக்கு மடைமாற்றம் செய்யப்பட்டது. உழைப்பாளி மக்களின் இந்த வாழ்வாதார சேமிப்பை கொள்ளை அடிக்கவே PFRDA ACT முன்மொழியப்பட்டது. 10 ஆண்டுகள் ஊழியர்களின் தொடர் போராட்டத்தால் சட்டமாக்கப்படாமல் இருந்த அச்சட்டம், பி.ஜே.பி., காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவால் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. தமிழக

மாநில கட்சிகள் தி.மு.க. ஆதரித்தும், அ.இ.அ.தி.மு.க. எதிர்த்தும் வாக்களித்தனர்.

உலக சுகாதார நிறுவனம் சில அம்சங்களை வரையறுத்துள்ளது. போதிய வருமானம், சத்துணவு, கல்வி, சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் குடிநீர், அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் சேவைகள் போன்ற அம்சங்களை உருவாக்குவது ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் அதிமுக்கிய கடமைகளாகும்.

இந்திய அரசிலமைப்புச் சட்டத்தின் Part 2 article 43 ல், ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் உழைக்கின்ற அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் வேலை செய்கின்ற அனைவருக்கும் தரமான வேலையும் அதன் மூலம் வாழ்க்கை ஊதியம் (Living wage) பெற்றிடவும், ஓய்வின் முழு சுகத்தையும் அனுபவித்திடக்கூடிய ஒரு தரமான வாழ்க்கையினை உத்திரவாதப்படுத்தக்கூடிய, மற்றும் சமூக, கலாச்சார வாய்ப்புகளை முழுமையாக அனுபவிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் தக்க சட்டம் இயற்றுதல் அல்லது பொருளாதார நிறுவனங்கள் அல்லது வேறு பல வழிகளின் மூலம் வழங்கிட அரசு கடுமையாக முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

ஆனால், நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆன நிலையிலும் 10 சதவீத மக்களுக்குக்கூட இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியான வாழ்நிலையை இதுவரை ஆண்ட அரசுகள் உத்திவாதப்படுத்தவில்லை. சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதால் நிதிநிலை கடும் பற்றாகுறை ஏற்படுகிறது எனக்கூறி, போராடிப் பெற்றிருக்கக்கூடிய ஓய்வூதியத்தை ரத்து செய்தது ஒரு ஜனநாயக அரசின், ஏற்கதக்க நடவடிக்கை அல்ல என்பதால் தொடர்ந்து போராடி வருகிறோம்.

‘எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும், கண்ணியத்துடனும், சம உரிமையுடனும் வாழ உரிமை உடையவர்கள்’’ என 1948 டிசம்பர் 10 -ல் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மனித உரிமை பிரகடனத்தை (Universal declaration of human rights) வெளியிட்டது.

மேலும், உச்சநீதிமன்றத்தின் நீதிஅரசர் Y.V. சந்திரசூட் தலைமையில் 5 நீதிபதிகள் அமர்வு, “ஓய்வூதியத்தை ரத்து செய்தது, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14 க்கு எதிரானது’’ என்று தீர்ப்பளித்து, ஓய்வூதியம் என்பது ‘தானமோ, தர்மமோ அல்ல. விருப்பப்பட்டு வழங்கப்படும் வெகுமதியோ அல்ல. அவர்களது பணி காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட கொடுபடா ஊதியம்தான்’’ என்றும், அரசு ஊழியர் பணியாற்றிய காலத்தில் இருந்த அதே கண்ணியத்தோடும், தன்மானத்தோடும் ஓய்வுக்குப் பின்னரும் வாழ வழிவகை செய்திட வழங்கப்படுவதுதான் ஓய்வூதியம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசின் கொள்ளை முடிவில் நீதிமன்றம் தலையிட முடியுமா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. பொதுவாக அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்பது உண்மைதான் ஆனால் அரசின் கொள்கை முடிவானது அரசியல் நிர்ணயச் சட்டம் மற்றும் இதர சட்டங்களுக்கு முரணாக இருந்தால் அவை செல்லதக்கது அல்ல எனவும், அப்பிரச்சினைகளில் நீதிமன்றம் தலையிட முடியும் எனவும் உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் ஓய்வூதியநிதி ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி ஆணையம் PFRDA குறித்த மசோதா நிறைவேற்றப்பட்டிருந்தாலும், ஓய்வூதியத்தை தனியார் மயமாக்குவது என்பது சட்ட விரோதமான நடவடிக்கையாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு 01-04-2003 முதல் புதிய பென்சன் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அத்திட்டத்தில் இதுவரை 6 லட்சத்து22 ஆயிரம் பேர் சேர்ந்துள்ளனர். ஊழியர்களின் பணம் 52 ஆயிரம் கோடி அரசிடம் உள்ளது.

புதிய ஓய்வூதிய திட்டத்தை மாநில அரசு விரும்பினால் அமுல்படுத்தலாம், இத்திட்டத்தை அமுல்படுத்துவது மாநில

அரசுக்கு கட்டாயம் இல்லை என்றும், அது மாநில அரசின் வருப்பம் சார்ந்தது என்றும் NPS சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மேற்கு வங்க அரசாங்கம் புதிய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்தவில்லை.

புதிய ஓய்வூதிய திட்டத்தின்படி அரசின் பங்குத் தொகையான 10 சதவீதமும், பழைய ஓய்வூதிய திட்டத்தின்படி ஓய்வூதியமும் ஒரே நேரத்தில் மாநில அரசு வழங்க வேண்டியிருப்பதால் ஒட்டுமொத்த ஓய்வூதிய செலவுதொகை குறையாது, மாறாக கூடுதலாகும் என்று 22-01-2007 ல் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் மேற்கு வங்க அரசு கூறியுள்ளது.

எனவே புதிய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்துவதால் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கான செலவு 2047 ஆம் ஆண்டு முதல்தான் குறையும் என்றும் 2053 ஆம் ஆண்டுதான் பழைய ஓய்வூதிய திட்ட செலவு இல்லாத ஆண்டாக மாறும் என்று சங்கங்களின் சார்பாக அரசுக்கு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம்.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் புதிய ஓய்வூதிய திட்டத்தை தமிழகத்தில் அமுல்படுத்துவதால் 40 ஆண்டுகளுக்கு மாநில அரசுக்கு கூடுதல் செலவு ஏற்படும். இது அரசுக்கு இரட்டை செலவாக இருக்கும் என்பது உண்மை. மாநில அரசுக்கு செலவாகும் இந்த இரட்டை செலவை மத்திய அரசு ஈடுகட்டாது. மாநில அரசே ஈடுகட்டிக்கொள்ள வேண்டும் என்பது நிதர்சனமான உண்மையாகும் இருப்பினும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை, அரசு செலவீனமாக பார்ப்பது சேமநல அரசு என்ற கோட்பாட்டிற்கு எதிரானதாகும் என்பதை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு ஏற்கனவே எந்தவிதமான பாதுகாப்பும் அற்ற புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்திட வேண்டும் என வலியுறுத்தி தமிழகத்தில் 10 ஆண்டுகளாக இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு எங்களது நியாயமான கோரிக்கையை தீர்க்கவில்லை, அழைத்துப் பேசவுமில்லை. மேலும் சட்டமன்றத்தில் அறிவித்த கோரிக்கை நிறைவேற்றப்படாத சூழலில் தொடர்ச்சியான போராட்டத்தை நடத்திய பிறகும் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் 2021 சட்டமன்ற தேர்தலில் அரசு ஊழியர் ஆசிரியர்களின் பெரும் எதிர்பார்ப்புடன் அறுதி பெரும்பான்மையுடன் தி.மு.க. தலைமையிலான ஆட்சி அமையப்பெற்றுள்ளது.

இந்த ஆட்சி மாற்றத்தில் அரசு ஊழியர் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர் என்பதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14 ஆம் மாநில மாநாட்டிலும், ஜாக்டோ ஜியோ வாழ்வாதார மாநாட்டிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேசியுள்ளார். அரசு ஊழியர் ஆசிரியர்களின் கோரிக்கைகளை தேர்தல் காலத்தில் சொன்னது மறுக்கவில்லை, மறக்கவுமில்லை என்றும் குறிப்பாக புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்தப்படும் என தேர்தல் பரப்புரையிலும், தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது நிறைவேற்றப்படும் என கூறியுள்ளார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக அகவிலைப்படி தவிர வேறு எந்த கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை. ஆனாலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநாட்டில் கூறியதை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில் அரசு ஊழியர் ஆசிரியர்கள் எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள்.

இந்தியாவில் ராஜஸ்தான், சத்தீஸ்கர், இமாச்சல பிரதேசம், பஞ்சாப் மாநிலங்கள் தங்களது ஊழியர்களுக்கு புதிய பென்சன் திட்டத்தை கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளனர். இச்சூழ்நிலையில் மாநில அரசுக்கு எந்தவிதத்திலும் நன்மைபயக்காத புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து, தேர்தல்கால வாக்குறுதியான பழைய ஓய்வூதிய திட்டத்தை அறிவிக்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம். ●



# பசி, பட்டினி இந்திய மக்கள் இறப்புரிமை?

- குணாஜி

2022-ஆம் ஆண்டிற்கான உலக பட்டினி குறியீட்டில் (GHI) இந்தியா, இதுவரை இல்லாத அளவிற்கு மோசமான இடத்தைப் பெற்றுள்ளது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட மொத்தம் 121 நாடுகளில், அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்க தேசம், நேபாளம், இலங்கை உள் ளிட்ட நாடுகளைக் காட்டிலும் பின் தங்கி இந்தியா 107 ஆவது இடத்தை பிடித்துள்ளது. அயர்லாந்தைச் சேர்ந்த 'கன்சர்ன் வேர்ல்ட்வைட்' (Concern World wide) அமைப்பும், ஜெர்மனியைச் சேர்ந்த 'வெல்ட் ஹங்கர் ஹில்ப்' (Welt Hunger Hilfe) அமைப்பும் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் உலக பட்டினிக் குறியீட்டை (Global Hunger Index -GHI) வெளியிட்டு வருகின்றன. 5-வயதுக்கு கீழுள்ள குழந்தைகள் சத்துணவு குறைபாட்டால் தங்கள் உயரத்திற்கு ஏற்ற எடை இல்லாமல் இருத்தல், வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் இருத்தல், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

இந்தியாவில் குழந்தைகள் உரிய எடையில்லாமல் இருப்பது 2014-ஆம் ஆண்டு மோடி ஆட்சிக்கு வந்தபோது 15.1 சதவிகிதமாக இருந்தது. இது 2022-இல் 19.3 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இதேபோல ஊட்டச்சத்து பற்றாக் குறை, 2018-2020இல் 14.6 சதவிகிதமாக இருந்தது, 2019-2021இல் 16.3 சத விகிதமாக உயர்ந்துள்ளது. உலகளவில் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள சுமார் 82 கோடியே 80 லட்சம் மக்களில் இந்தியாவில் மட்டும் சுமார் 22 கோடியே 40 லட்சம் மக்கள் உள்ளனர்.

கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்தாண்டும் அண்டை நாடுகள் இந்தியாவை விட சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. பொருளாதார சீர்குலைவுக்கு உள்ளான நிலையிலும், 2022-ஆம் ஆண்டிற்கான உலக பட்டினிக் குறியீட்டில், இலங்கை இந்தியாவை விட 43 இடங்கள் முன்னிலை பெற்று- 64ஆவது இடத்தை பெற்று உள்ளது. நேபாளம் 81 இடத்தையும், வங்க தேசம் 84 இடத்தையும் பிடித்துள்ளன. பாகிஸ்தான் கூட 100 இடங்களுக்குள் ஒன்றாக, 99-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. தெற்காசியாவில், இந்தியாவை விட மோசமான இடத்தில் உள்ள நாடாக, தலிபான்கள் ஆட்சி செய்யும் ஆப்கானிஸ்தான் (109-ஆவது இடம்) மட்டுமே உள்ளது. இந்த வித்தியாசமும் கூட வெறும் 2 இடங்கள்தான். உலக அளவில், 44 நாடுகள் 'தீவிரமான' அல்லது 'ஆபத்தான' நிலையில் உள்ள நாடுகளாக வரையறுக்கப்பட்டு உள்ளது. இந்த பட்டியலில் 2-ஆவது ஆண்டாக இந்தியா இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் பட்டினிக் கொடுமை திடீரென அதிகரித்து விட வில்லை என்றும், மோடி தலைமையிலான பாஜக அரசு ஆட்சிக்கு வந்த பின், கடந்த 7 ஆண்டுகளாகவே மோசமான பட்டினி குறியீட்டில்தான் இந்தியா பயணித்து வருகிறது என்றும் உலகப் பட்டினிக் குறியீடு (Global Hunger Index) கடந்த 2021ஆம் ஆண்டு அறிக்கையில் தெளிவுபடுத்தி இருந்தது. இதுவே 2015-ஆம் ஆண்டில் மோடி ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டில் 80-ஆவது இடத்திற்குச் சென்ற இந்தியா (117 நாடுகளில்), 2016-இல் 97-ஆவது இடம் (118 நாடுகளில்), 2017-இல் 100-ஆவது இடம் (119 நாடுகளில்), 2018-இல் 103-ஆவது இடம் (132 நாடுகளில்), 2019-இல் 102-ஆவது இடம் (117 நாடுகளில்), 2020-இல் 94-ஆவது இடம் (107 நாடு களில்), 2021-இல் 101-ஆவது இடம் (116 நாடு களில்) என்று மோசமான இடத்தை நோக்கி நகர்ந்து, தற்போது 2022-இல் 107-ஆவது இடத்தை (121 நாடு களில்) அடைந்துள்ளது. இதன்மூலம் மோடி ஆட்சியின் 8 ஆண்டுகளிலும் இந்தியா பட்டினிப் பாதையில் வேகமாக பயணிப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஆனால், உலகளாவிய பட்டினிக் குறியீட்டிற்கான ஆய்வுமுறை

அறிவியல்பூர்வமற்றது என்று இந்தியா தொடர்ந்து இந்த புள்ளிவிவரங்களை மறுத்து வருகிறது.



உலகப் பட்டினிக் குறியீட்டில், 5 மதிப்பெண்களுக்கு கீழே பெற்று, சீனா, துருக்கி மற்றும் குவைத் உள்பட பதினேழு நாடுகள் கடந்த முறை பட்டினி ஒழிப்பில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. அந்த நாடுகள், 2022-ஆம் ஆண்டிலும் தங்களின் முன்னிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. பட்டினி குறைவான நாடுகள் என்ற இடத்தைப் பெற்றுள்ளன.

2016ல் பண மதிப்பிழப்பு அறிவித்ததிலிருந்து 2020ல் கோவிட் பெருந்தொற்றின் போது சமூக முடக்கம் அறிவிக்கப்பட்ட காலம் வரையிலும் மோடி அரசாங்கம் மக்களின் வாழ்வாதாரங்களின் மீது ஏற்படுத்திய கொடூரமான தாக்குதல்கள் என்றென்றும் நினைவுகூறத் தக்கவை. மக்களின் துன்ப துயரங்களைச் சுட்டிக்காட்டி அறிக்கைகள் எதுவும் வெளிவருமானால் இந்தியாவின் சித்திரத்தை சீர்குலைப்பதற்காகவே இவ்வாறு அறிக்கைகள் வெளியாகி இருப்பதாக கூறி அதனை மறுப்பது மோடி அரசின் வாடிக்கையாக இருந்து வருகிறது. சமீப காலங்களில் வேலையின்மை அதிகரித்துள்ள நிலையில் பொருளாதார நெருக்கடியும் கோடிக்கணக்கான மக்களை வறுமை நிலைக்கும் உணவு பாதுகாப்பின்மை நிலைக்கும் தள்ளியுள்ள நிலையில் பொது விநியோக முறையை விரிவுபடுத்த வேண்டும் அது மிகவும்முக்கியமானதாகும் என்பதை மோடி அரசாங்கம் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

உணவு பாதுகாப்பு சட்டத்தின்கீழ், சென்ற மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, அரசாங்கம் கிராமப்புற மக்களில் குறைந்தபட்சம் 75 விழுக்காட்டினருக்கும், நகர்ப்புறங்களில் உள்ள மக்களில் 50 விழுக்காட்டினருக்கும் மானிய விலையில் உணவு தானியங்களை அளித்திட வேண்டும் என்பது அரசமைப்புச் சட்ட விதியாகும். சென்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 ல் நடந்துள்ள நிலையில் தற்போது 12 கோடிக்கும் மேலான பேர் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படாமல் உள்ளனர். கோவிட் நெருக்கடி ஏற்பட்ட சமயத்திலும் கூட அரசாங்கம்தன்னுடைய கையிருப்பில் 10 கோடி டன்களுக்கும் மேலான உணவு தானியங்களை இருப்பில் வைத்திருந்த போதிலும் கூட, தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இருந்து வந்த பயனாளர்களுக்கு மட்டும் உணவு தானிங்களை விநியோகம் செய்தது மோடி அரசு. பொருளாதார நெருக்கடியால் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட பல லட்சக்கணக்கான மக்களுக்கு மனிய விலையில் உணவு தானியங்களை அளித்திடுவதற்கான முயற்சி எதையும் இந்திய அரசு எடுக்கவில்லை.

சமீப ஆண்டுகளில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து உயர் பணவீக்கம் ஏற்பட்டிருப்பதால் உணவு பாதுகாப்பின்மையும், பசி-பட்டினி நிலைமையும் அதிகரித்திருக்கின்றன. 2022ல் பல மாதங்களில் இதே காலகட்டத்தில் 2021ல் இருந்த விலைவாசிகளை விட உணவுப் பொருட்கள் விலை 7 முதல் 9 சதவீதம் அதிகரித்திருந்தன. இந்த காலகட்டத்தில்தான் மோடி அரசாங்கம் எரிபொருள் மீது கடுமையான வரி விதித்தது. இவ்வாறு எரிபொருட்களின் மீது கடுமையான விலையேற்றம் காரணமாக உணவு உட்பட அனைத்தின் விலைகளும் கடுமையாக உயர்ந்தன. மேலும் ஒன்றிய அரசு புதிய ஜிஎஸ்டி வரிவிதிப்பு மூலமாக சாமானிய மக்கள் மீதும், சிறிய உற்பத்தியாளர்கள் மீதும் வரிச்சுமையை கடுமையாக ஏற்றி இருககிறது. இவ்வாறு வசூலிக்கும் ஜிஎஸ்டி வரிகளில் நியாயமாக மாநில அரசுகளுக்கு அளிக்க வேண்டிய பங்கையும் அளிப்பதில்லை. பெரும் வர்த்தக நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகளை அளிப்பதுன் அவற்றின் கடன்களையும் தள்ளுபடி செய்யும் அதே சமயத்தில் சாமானிய மக்கள், அவர்கள் வாங்கும் பொருட்கள் மீது வரிவிதித்துக் கொண்டேயிருந்தது. பொருளாதார தாராளமயத்தின் காரணமாக உரங்கள், சமையல் எண்ணெய்கள், பருப்பு வகைகள் முதலியனவற்றிற்கு இறக்குமதியையே அதிகம் சார்ந்திருப்பதால் சமீப ஆண்டுகளில் இந்தப் பொருட்களின் விலைகள் உலக அளவிலான பண வீக்கத்திற்குக் காரணமாக அமைந்தன.

புள்ளி விவரங்களைக் காட்டி நாட்டின் உழைக்கும் மக்களை முட்டாளாக்கிவிட முடியாது. இந்த அரசாங்கத்தின் கேடு விளைவிக்கும் பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக ஏற்பட்டுள்ள துன்ப துயரங்களை எப்போதும் மக்கள் மறக்கமாட்டார்கள். வேலையின்மை, வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை இன்றைய தினம் எரியும் பிரச்னையாக மாறியிருக்கின்றன. பெருமுதலாளிகள் கார்ப்பரேட்டுகள் மீது காட்டிவரும் கரிசனத்தை மோடி அரசாங்கம் ஏழைகள் மீதும் பொதுமக்கள் மீதும் காட்டுவதில்லை. இதனால் பசியும் பட்டினியும் இந்திய மக்களின் இறப்புரிமையாக மாறிவருகிறது. ●

# போராட்ட வாளேந்தி உரிமைக்கு தோள் கொடுப்போம்!

**- மு.அன்பரசு**

சமூக நீதி காக்க தேசிய அரசுகள் வலிமையாக இருக்க வேண்டும் என்ற கோட்பாடு உலக அளவில் சிதைக்கப்பட்டு வருகிறது. உலக மயம் இன்று தேசிய அரசுகளை வலுவிழக்கச் செய்துள்ளது. தேசப்பொருளாதாரம் சமூக நீதி போன்றவை அரசின் அதிகார எல்லைக்குள் இருந்து வெளியே வீசப்பட்டுள்ளன. கார்ப்பரேட்டுகளின் கையில் சிக்கி இந்த உலகம் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் தங்களின் சுயலாபங்களுக்காக இந்த உலக உருண்டையின் வடிவத்தையே மாற்றவிடத் துடிக்கிறார்கள். அதனால் சமூக நீதி என்ற தனித்துவம் மிகுந்த வார்த்தையை பிரபஞ்ச வெளியில் வீசிவிட்டு அந்த இடத்தில் சந்தை நீதி என்ற வார்த்தையை வடிவமைத்திருக்கிறார்கள். ஏழைகளுக்கான நலத்திட்டங்கள், பொது விநியோக முறை, இட ஒதுக்கீடு போன்ற எதையும் கார்ப்பரேட்டுகள் சகித்துக்கொள்ளத் தயாராக இல்லை. சந்தையே இன்று சமத்துவத்தை உருவாக்கும் என்று கருத்தை முன் வைக்கிறார்கள். தங்கள் கொள்கைகளுக்கு ஒத்துப்போகிறவர்களை ஆட்சிக்கட்டிலில் அமர வைக்க எல்லாவிதமான பிரயத்தனங்களையும் மேற்கொண்டு வருகிறார்கள். மக்கள் நல அரசு, மானியம் போன்றவை இனி சாத்தியமில்லை என்ற நிலை ஏற்பட்டு வருகிறது. கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்புகள் எல்லாம் இனிமேல் அரசின் பொறுப்புகள்அல்ல. அவை தனி நபர் பொறுப்புகள். ''இனிமேல் அரசுகளுக்கு இதுபோன்ற விஷயங்களில் பொறுப்பு இல்லை'' என்கிற சித்தாந்தம் முன் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இதனூடே 'கார்ப்பரேட்டுகள் சமூக நீதியுடன் செயல்படுவார்கள்' என்ற பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புவி வெப்பமயமாதல், காற்று மாசுபாடு, சுகாதாரமற்ற குடிநீர், உணவு பற்றாக்குறை, பட்டினிக் குறியீடு போன்றவை பற்றியெல்லாம் இவர்களுக்கு ஒரு துளியூண்டு அக்கறை கூட இல்லை. இவர்களின் இரட்டைக் குறிக்கோள்கள் பணம், அதிகாரம் மட்டுமே. செல்வ வளங்களையும் அதிகாரங்களையும் குவித்து வைத்துக்கொண்டு இன்று உலகம் தாங்கள் சொன்னபடி சுழல வேண்டும் என்று, அதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை கற்பனை செய்யக்கூட மனமில்லாதவர்களாக கார்ப்பரேட்டுகளும் அவர்கள் காலடியில் வீழ்ந்துகிடக்கும் அரசியல்வாதிகளும் மாறிவரும் சூழல் இந்த உலகத்திற்கே பேராபத்தாகத்தான் முடியும். இத்தகைய நிலையில் சமூக நீதியை சமத்துவத்தை சாதிக்க அரசு வலுவாக இருக்க வேண்டும் என்ற நிலைக்கு நேரெதிரான சூழலை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பதற்கான திட்டமிடலுக்கு ஆழமான விவாதத்தை நாம் உடனடியாக துவக்கியாக வேண்டியுள்ளது.

கொரோனா பெருந்தொற்றும், அதன் விளைவாக நிகழ்ந்திருக்கும் பொருளாதார நெருக்கடிகளும், ரஷ்யா-உக்ரைன் போரும் உலக அளவில் பெரிய பொருளாதார நெருக்கடியை உருவாக்கியுள்ளது. வேலையின்றி பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வீதியில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பசி, பஞ்சம்,

பட்டினி போன்றவை தலைவிரித்தாட ஆரம்பித்துவிட்டன. அன்றாட வாழ்வு என்பது உலக மக்கள் தொகையில் 60 சதவீதம் மக்களை ஆபத்தான நிலைக்கு தள்ளியுள்ளது. இவர்களில் 30 சதவீதம் பேர் அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்யப் போகிறோம் என்று எண்ணுபவர்களாக மாறியுள்ளனர். பட்டினி குறியீடுகள் அதிகரித்துள்ளன. கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத பணவீக்கம், 300 ஆண்டுகளில் இல்லாத பொருளாதார மந்தநிலை, மின்சாரக் கட்டணம், எரிவாயு விலையுயர்வு, ஏற்றுமதி, வேலை வாய்ப்பில் தொடரும் தேக்கநிலை, ரஷ்யா-உக்ரைன் போர் போன்ற சாதகமற்ற புறக்காரணிகளினால் உலகின் பெரும்பான்மையான நாடுகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. இவற்றை மீட்டெடுப்பதற்கோ அல்லது குறைந்த பட்சம் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கோ பொதுவுடைமைக் கொள்கையும் சமத்துவச் சமுதாயம் படைக்கும் நோக்கம் கொண்ட தோழமை வர்க்கமும் திரண்டெழுந்து வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இன்று உலக அளவில் சீனா உலகம் உற்று நோக்கும் நாடாக மாறியுள்ளது. டெய் சியோ பிங் தலைமையில் தொடங்கிய புதிய பொருளாதாரம் மற்றும் அரசியல் கொள்கைகள் சீனாவை அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக பொருளாதார வல்லரசாக உயர்த்தியுள்ளது. மாவோ மற்றும் டெங் சியோ பிங்கிற்குப் பிறகு சம முக்கியத்துவம் வாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவராக ஜி. ஜின்பிங் இருக்கிறார். அவர் இப்போது மூன்றாவது முறையாக பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சீனாவில் 1980 முதல் ஏற்பட்ட தொடர் முயற்சியின் விளைவாக 77 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். சீனாவை ஒரு சமத்துவ சமூகமாக மாற்றும் முயற்சியில் தனி நபர்களுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான பொருளாதார ஏற்றத் தாழ்வு மற்றும் சமத்துவமின்மையை விரைவாக குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வருகிறார் அவர். மேலும் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாக்க மிகவும் கவனமாக தலையிட வேண்டியதன் அவசியத்தை மற்றொரு முக்கியமாக நடவடிக்கையாக அவர் வலியுறுத்தி வருகிறார். இவையன்றி பல்வேறு மட்டங்களில் நடைபெற்றுவரும் ஊழலுக்கு எதிராக வலுவான திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் ஜின்பிங்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு உள்நாட்டுப் பிரச்னையின் மூலம் விடுதலையான சீனாவின் நிலை இந்தியாவின் நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. பசியை ஒழித்து நாட்டை தன்னிறைவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற முதல் நுhற்றாண்டின் இலக்கை சீனா வெற்றிகரமாக கடந்துள்ளது. 1978 மற்றும் 2019க்கு இடையில் சீனா தனது நாட்டில் உள்ள ஏழைகளின் எண்ணிக்கையை 7,7 கோடியே 55 லட்சமாக குறைத்துள்ளது. கடந்த நாற்பது ஆண்டுகளில் 80 கோடி சீன மக்கள் கடும் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளளனர். மக்கள் தொகை அடிப்படையில் இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சீனா முன்னெப்போதும் இல்லாத அளவில் வறுமையை ஒழித்துள்ளது என்பதை உலக நிறுவனங்களே சான்றளிக்கின்றன. பசியை ஒழித்து நாட்டை தன்னிறைவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற முதல் நுhற்றாண்டின் இலக்கை முற்றிலுமாக கடந்த பின்னர் சோசலிச நாடாக மாறுவது என்ற இரண்டாவது இலக்கை சீனா அறிவித்துள்ளது.

விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் உறுதியான கொள்கைகள் சீனாவின் வறுமை ஒழிப்புக்கு வழி வகுத்துள்ளன. விரைவான மற்றும் நீடித்த வளர்ச்சியுடன் நாட்டில் பரந்த பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது. விவசாயத் துறையில் சீர்திருத்தங்கள் தொடங்கப்பட்டன. அடித்தட்டு விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சந்தை சலுகைகள் மூலம் உற்பத்தி அதிகரித்தது. திறமையற்ற, உழைப்பு மிகுந்த தொழில்களை ஊக்குவிப்பது, விவசாயம் அல்லாத

தொழில்களுக்கு நன்மை பயத்து வருகிறது. நகரமயமாக்கல் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையை சீரழித்துள்ளது. உள்கட்டமைப்புத்துறையில் பொது முதலீடு உச்சத்தை எட்டியுள்ளதாக உலக வங்கியும் மதிப்பிட்டுள்ளது. அங்கே வறுமை ஒழிப்புத் திட்டம் புவியியல் ரீதியாகவும் பின்தங்கிய பகுதிகளை இலக்காகக் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஏழைக் குடும்பங்களுக்கு சிறப்பு சமூக பாதுகாப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தலைமையின் மனப்பூர்வ மற்றும் சமரசமற்ற தலையீடுகள்தான் ஒரு பரந்த மற்றும் பன்முகத் தன்மை கொண்ட நாடாகவும் அமெரிக்காவுக்கு நிகரான வல்லரசாக பிற நாடுகள் நோக்கும் தோற்றத்தை சீனாவுக்கு பெற்றுத் தந்துள்ளது. கம்யூனிசம் தோற்கவில்லை என்பதற்கு எடுத்தக்காட்டாக சீன நாடு விளங்குவதோடு, உலகின் பெரும்பாலான நாடுகளை சீனாவின் வளர்ச்சி மிகவும் சிந்திக்க வைத்துள்ளது.

சீனாவின் நிலைமை பட்டினி குறியீட்டில் தன்னிறைவு பெற்று சோசலிச யுகத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கும்வேளையில், பிரிட்டனில் நிலவும் குழப்பமான அரசியல் சூழ்நிலை அங்குள்ள உழைப்பாள ஏழை நடுத்தர வர்க்க மக்களை கடுமையான பாதிப்புகளுக்கு ஆழ்த்தும் என்ற கணிப்புகள் வெளிவந்துள்ள நிலையில் இந்தியாவின் நிலைமை அரிதாரம் பூசிக்கொண்ட ஆட்டக்காரனைப் போல் உள்ளது. கிட்டத்தட்ட ரஷ்யா-உக்ரைன் போராட்டம் போல் மத்திய அரசுக்கும் மக்களுக்கும் இடையில் வாழ்வாதாரப் போர் நடந்து வருகிறது. அரசாங்கம் தனது அனைத்து பலங்களையும் கொண்டு வரி வட்டி என மக்களைப் பிழிந்து வருகிறது. அரசை குறை கூறுபவர்களை விமர்சகர்களை கடுமையான சட்டங்கள் மூலம் பழி வாங்குகிறது. தங்களுடைய கட்சிக்கு எதிராக நீதி சொன்னவர்களை நேர்மையாக நடந்து கொண்டவர்களை பதவி உயர்வு வழங்காமல் தடுத்தோ அதிகாரமில்லாத பதவிகளில் வைத்தோ பழிவாங்கி வருகிறது. தற்போது வெளிவந்திருக்கும் பட்டினிக் குறியீடு விஷயத்திலும் அது தவறான தகவல் என அறிக்கையை பழித்துக் கூறியுள்ளது மோடி அரசாங்க 2016ல் பண மதிப்பிழப்பு அறிவித்ததிலிருந்து 2020ல் கோவிட் பெருந்தொற்றின் போது சமூக முடக்கம் அறிவிக்கப்பட்ட காலம் வரையிலும் மோடி அரசாங்கம் மக்களின் வாழ்வாதாரங்களின் மீது ஏற்படுத்திய கொடூரமான தாக்குதல்கள் என்றென்றும் மறக்க இயலாதவை. மக்களின் துன்ப துயரங்களைச் சுட்டிக்காட்டி அறிக்கைகள் எதுவும் வெளிவருமானால் இந்தியாவின் சித்திரத்தை சீர்குலைப்பதற்காகவே இவ்வாறு அறிக்கைகள் வெளியாகி இருப்பதாக கூறி அதனை மறுப்பது மோடி அரசின் வாடிக்கை. சமீப காலங்களில் வேலையின்மை அதிகரித்துள்ள நிலையில் பொருளாதார நெருக்கடியும், கோடிக்கணக்கான மக்களை வறுமை நிலைக்கும், உணவு பாதுகாப்பின்மை நிலைக்கும் ஆளாகியுள்ள சூழ்நிலையில் பொது விநியோக முறையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை மோடி அரசாங்கம் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

உணவு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அரசாங்கம் கிராமப்புற மக்களில் குறைந்தபட்சம் 75 விழுக்காட்டினருக்கும், நகர்ப்புறங்களில் உள்ள மக்களில் 50 விழுக்காட்டினருக்கும் மானிய விலையில் உணவு தானியங்களை அளித்திட வேண்டும் என்பது அரசமைப்புச் சட்ட விதியாகும். சென்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 ல் நடந்துள்ள நிலையில் தற்போது 12 கோடிக்கும் மேலான பேர் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படாமல் உள்ளனர். கோவிட் நெருக்கடி ஏற்பட்ட சமயத்திலும் கூட அரசாங்கம் தன்னுடைய கையிருப்பில் 10 கோடி டன்களுக்கும் மேலான உணவு தானியங்களை இருப்பில் வைத்திருந்த போதிலும் கூட, தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இருந்து வந்த பயனாளர்களுக்கு மட்டும் உணவு தானிங்களை விநியோகம்

செய்தது மோடி அரசு. பொருளாதார நெருக்கடியால் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட பல லட்சக்கணக்கான மக்களுக்கு மானிய விலையில் உணவு தானியங்களை அளித்திடுவதற்கான முயற்சி எதையும் இந்திய அரசு எடுக்கவில்லை.

சமீப ஆண்டுகளில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து உயர் பணவீக்கம் ஏற்பட்டிருப்பதால் உணவு பாதுகாப்பின்மையும், பசி-பட்டினி நிலைமையும் அதிகரித்திருக்கின்றன. 2022ல் பல மாதங்களில் இதே காலகட்டத்தில் 2021ல் இருந்த விலைவாசிகளை விட உணவுப் பொருட்கள் விலை 7 முதல் 9 சதவீதம் அதிகரித்திருந்தன. இந்த காலகட்டத்தில்தான் மோடி அரசாங்கம் எரிபொருள் மீது கடுமையான வரி விதித்தது. இவ்வாறு எரிபொருட்களின் மீது கடுமையான விலையேற்றம் காரணமாக உணவு உட்பட அனைத்தின் விலைகளும் கடுமையாக உயர்ந்தன. மேலும் ஒன்றிய அரசு புதிய ஜிஎஸ்டி வரிவிதிப்பு மூலமாக சாமானிய மக்கள் மீதும், சிறிய உற்பத்தியாளர்கள் மீதும் வரிச்சுமையை கடுமையாக ஏற்றி இருக்கிறது. இவ்வாறு வசூலிக்கும் ஜிஎஸ்டி வரிகளில் மாநில அரசுகளுக்கு அளிக்க வேண்டிய பங்கையும் அளிப்பதில்லை. பெரும் வர்த்தக நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகளை அளிப்பதுன் அவற்றின் கடன்களையும் தள்ளுபடி செய்யும் ஒன்றிய அரசு சாமானிய மக்கள் வாங்கும் பொருட்கள் மீது மட்டும் வரிவிதிப்பதை நிறுத்தவில்லை. பொருளாதார தாராளமயத்தின் காரணமாக உரங்கள், சமையல் எண்ணெய்கள், பருப்பு வகைகள் முதலியனவற்றிற்கு இறக்குமதியையே அதிகம் சார்ந்திருப்பதால் சமீப ஆண்டுகளில் இந்தப் பொருட்களின் விலைகள் உலக அளவிலான பண வீக்கத்திற்குக் காரணமாக அமைந்தன. புள்ளி விவரங்களைக் காட்டி நாட்டின் உழைக்கும் மக்களை முட்டாளாக்கிவிட முடியாது. இந்த அரசாங்கத்தின் கேடு விளைவிக்கும் பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக ஏற்பட்டுள்ள துன்ப துயரங்களை எப்போதும் மக்கள் மறக்கமாட்டார்கள். வேலையின்மை, வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை இன்றைய தினம் எரியும் பிரச்னையாக மாறியிருக்கின்றன. ஆனால் அரசியல் வாதிகள் மக்களின் வாழ்வாதாரம் பற்றியோ அவர்களின் உணவு உடை இருப்பிடம் போன்ற அடிப்படை விஷயங்கள் பற்றியோ கல்வி வேலை வாய்ப்பு போன்றவை பற்றியோ அக்கறை கொண்டவர்களாகத் தெரியவில் லை.

இந்த நாட்டில் அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் ஈடுபடும் ஒவ்வொரு விவாதமும் செய்யும் செயல்களும் போடும் உத்தரவுகளும் பெரும்பாலும் மதத்தைப் பற்றியும் மத வேறுபாடுகள் பற்றியும் இருக்கின்றன. இதன்மூலம் இவர்கள் சாதிக்க நினைப்பது என்ன? நாம் ஒருவரையொருவர் வெறுக்கத்தான் இதன்மூலம் பயிற்றுவிக்கப்படுகிறோமா? முஸ்லிம்கள் அனைவரும் வன்முறையாளர்கள் எனவும், கிறிஸ்துவர்கள் என்றால் அனைவரையும் மதம் மாற்றிவிடுபவர்கள் எனவும் இந்துக்கள் அனைவரும் இந்தியாவை கைப்பற்றிவிடுவார்கள் எனவும் திட்டமிட்டு பரப்பப்படும் செய்திகளின் நோக்கம் என்ன? வேலைவாய்ப்பின்மை குறித்தும், விவசாயிகள் நிலை குறித்தும், பணமதிப்பு நீக்க விளைவுகள் குறித்தும் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆட்சியாளர்கள் யாராவது பேசுகிறார்களா? இன்றைக்கு அரசியல் அரங்கில் என்ன நடந்து கொண்டிருக்கிறது. நிதியமைச்சரும், பொருளாதாரத்துறை ஆலோசகரும், ரிசர்வ் வங்கி ஆளுநரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்கின்றனர். விலைவாசி உயர்வு, பெட்ரோல் டீசல், சமையல் எரிவாயு விலையேற்றம், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு போன்ற விவகாரங்களில் ஆளும் தரப்பினர் எதிர்தரப்பினர் மீதும் எதிர்கட்சியினர் ஆளும் அரசின் மீதும் வசைமாறி பொழிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தங்களுக்குள்

விவாதித்து ஒருமித்த கருத்துக்கு வரமுடியாதா? இதுகுறித்து யாருமே பேசாமல் இருப்பது ஏன்? ஒவ்வொரு நாளும் வங்கிகள் பணத்தை இழந்து கொண்டிருக்கின்றன. அது யாருடைய பணம்? பொதுமக்கள் பணம். அதைப்பற்றி எந்த அரசியல்வாதியாவது கவலை கொண்டதுண்டா? அரசாங்கங்கள் கொடுக்க வேண்டிய கல்வி, மருத்துவம், சுத்தமான காற்று, குடிநீர், நியாயமான விலையில் உணவுப்பொருட்கள் போன்ற நமது அடிப்படைத் தேவைகள் அனைத்தும் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றாவது இந்தியக் குடிமகனுக்கு இன்று கிடைப்பதாக நீங்கள் உணர்கிறீர்களா? இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரர் கூட சுத்தமான காற்றை சுவாசிக்க முடியவில்லை. சுத்தமான நீர் இல்லை. கல்வி இல்லை. உடல் ஆரோக்கியம் இல்லை. உணவு கூட இல்லை. எப்பொழுது இதைப்பற்றியெல்லாம் பேசப்போகிறோம் ? இப்பொழுதுள்ள அரசியல் வாதிகள் பேச விரும்புவது ஒவ்வொருவரின் மதம் பற்றியும் சாதிபற்றியும் மிஞ்சிப்போனால் ஆளும்கட்சிக் காரனின் ஊழல் பற்றி மட்டும்தான். இதை வைத்துக்கொண்டு நாம் யாருக்கு வாக்களிப்பது என்பதில் எந்த முடிவுக்கு வர முடியும்? இவர்களுக்கு நாமெல்லாம் மனிதர்களாக தெரியவில்லை. நமது குடும்பங்களைப் பற்றிய அக்கறை சிறிதும் இல்லை. ஒவ்வொரு தேர்தலிலும் நமது வாக்குகளை ஏமாற்றி பெற்றுத்தான் இவர்கள் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், நாம் மற்றவர்களை எப்படி வெறுப்பது என்பது குறித்து வாட்ஸ்ஆப் செய்திகளை அனுப்புகின்றனர். பாரதிய ஜனதா கட்சிதான் மிகப்பெரிய ஊழல் கட்சி என பிபிசி செய்தி வெளியிட்டுள்ளதாக ஒரு வாட்ஸ்ஆப் செய்தி வரும். 6 மாதங்களுக்குப் பிறகு காங்கிரஸ்தான் மிகப்பெரிய ஊழல் கட்சிஎன அதே பிபிசிதான் செய்தி வெளியிட்டுள்ளதாக இன்னொரு வாட்ஸ்ஆப் செய்தி வரும். இவை இரண்டுமே பொய்யான செய்திகள். மக்களை ஒரு குறிப்பிட்ட கோணத்தில் சிந்திக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன. இதன்மூலம் தங்கள் அடிப்படை தேவைகளை பற்றி விவாதம் செய்யாமல் யார் பெரிய ஊழல்வாதி என்பதில் கவனம் செலுத்த ஆரம்பித்து விடுவர். இப்படி எல்லாம் திசை திருப்பி மக்களை முட்டாள்களாக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. இதனை நாம் வன்மையாக நிராகரிக்க வேண்டும். என் மதத்தைப் பற்றியோ சாதியைப் பற்றியோ பேசுவதற்கு அரசியல்வாதிகளுக்கு உரிமை கிடையாது என நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். என்னுடைய சாதியோ என்னுடைய மதமோ உன்னுடைய அரசியல் வணிகமாகிவிடாது. நீ பேச வேண்டுமென்றால் காற்று மாசுபாடு குறித்து...நீர் மாசுபாடு குறித்து பேசு அதை சரி செய்வது எப்படி என்பது குறித்து விவாதங்களை துவக்கு. இதுபோன்ற விஷயங்களைப் பேசுவதுதான் அரசியல்வாதிகளுக்கு அழகு. இந்த தேசத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் இரவில் பசியோடு படுக்கைக்குச் செல்கின்றனரே அதுபற்றி பேசுவதுதான் ஆட்சியாளர்களின்/ அரசியல்வாதிகளின் முழுமுதற் கடமையாக இருக்க வேண்டும். 5 வயதுக்குக் குறைவான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக சாத்தியமான நோய்களால் தாக்கப்பட்டு மரணிக்கின்றனவே அதைப்பற்றி அக்கறை கொள்வதுதான் அரசியல்வாதிகள் ஆட்சியாளர்களின் பொறுப்பாக இருக்க வேண்டும்.


தோழர்களே நாம் நம்முடைய நேரத்தையும் ஆற்றலையும் மக்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். இந்த ஆட்சியாளர்களின் ஒவ்வொரு பொய்களையம் தோலுரித்துக் காட்ட வேண்டிய நேரம் இதைவிட வேறெதுவும் வாய்க்கப்போவதில்லை நமக்கு. அரசியல்வாதிகளின் மலிவான அரசியல் விளையாட்டிற்காக இந்த நாட்டின் ஜனநாயகத்தை நாம் பலிகொடுத்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். அது குறித்து நாம் தீவிரமாக சிந்தித்து திட்டங்களை வடிவமைக்க வேண்டிய தருணம் இது. மாற்றங்கள் எதுவும் தானாக வந்துவிடாது. நாம்தான் ஏற்படுத்த வேண்டும். அந்த

மாற்றத்திற்கான காரணியாக நாம் இருப்போம்.

நாட்டில் அபார தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்கிறார்கள், பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற்றமடைந்து வருகிறது என்கிறார்கள். ஐடி தொழில் துறையில், விண்வெளி தொழில் நுட்பத்தில், பல்வேறு ஆராய்ச்சிகளில் இந்தியா வியத்தகு வளர்ச்சி அடைந்து வருவதாகக மத்திய அமைச்சர்களும் அதிகாரிகளும் தெரிவிக்கிறார்கள். ஆனால் நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆகிய பிறகும் ஏழை எளிய மக்கள் குறைந்ததாக தெரியவில்லை. வறுமை நிலையில் தள்ளப்படுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருவதாகத்தான் செய்திகள் வருகின்றன. பட்டினிக் குறியீடு தரவரிசையில் உள்ள 122 நாடுகளில் இந்தியா 101ஆவது இடத்திலிருந்து 107வது இடத்திற்கு இறங்கியுள்ளதாக செய்திகள் வருகின்றன. பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், நேபாளம், மியான்மர் நாடுகளை விட படுபாதாளத்தில் சென்றிருக்கிறது. விண்ணை கிழிக்கும் வேகத்தில் விஷம்போல் ஏறிச்செல்லும் விலைவாசியை இந்திய தொழில் நுட்பங்களால் குறைக்க முடியவில்லை. என்னதான் அதிநவீன தொழில்நுட்ப வளர்ச்சியை இவ்வுலகம் கண்டிருந்தாலும் ஒவ்வொரு வேளை உணவிற்கும் கையேந்தி நிற்கும் மனித குலத்தின் அவல நிலை இன்னும் மாறவில்லை. இனி எத்தனை யுகங்கள் ஆனாலும் இது மாறப்போவதில்லை என்பது செல்வங்களை குவித்து வைத்திருக்கும் பணமுதலைகள் மற்றும் அதிகார வர்க்கங்களின் ஆணவத்திலிருந்து நன்றாகவே தெரிகிறது. நாகரீகம் தேவையில்லை முதலில் சகல ஜனங்களுக்கும் சோறு கண்டுபிடி என்று சொன்ன பாரதியின் வரிகள் இன்னும் சில நூறு ஆண்டுகளானாலும் பலிதமாகப்போவதில்லை என்பதைத்தான் இவை காட்டுகின்றன. இவற்றை மாற்றிக்காட்டிவிட வேண்டுமென்றுதான் நம்மைப்போன்ற அமைப்புகள் அரசாங்கங்களுக்கு எதிராக மக்களுக்கான உரிமைகளை உணவு, உடை, வாழ்விடங்களுக்காக போராடி வருகின்றன.

சென்ற பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தலில் நம்முடன் நின்று நமக்காக அறிக்கைகள் விட்டதோடு மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று சொன்ன திமுக தலைவரும் அன்னைறைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாய் ஆகிவிட்ட நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதிகளை இன்னமும் நிறைவேற்றாமல் உள்ளது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தமிழக முதல்வர் தேவையான காலத்திற்கும் அதிகமாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை விரக்தியின் விளிம்பில் நிற்க வைத்துள்ளதை இனியும் சகித்துக்கொள்ள இயலாத நிலைக்கு நாம் அனைவரும் தள்ளப்பட்டிருக்கிறோம். அகவிலைப் படியை கேட்காமல் கொடுக்கின்ற மனது இந்த அரசுக்கு இல்லா நிலையில் அதையும் கூட நாம் போராடிப் பெறுகின்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது இந்த அரசின் நிலைமைக்கும் அதன் திறமைக்கும் உள்ள நீண்ட இடைவெளியை காட்டுவதாகவே உள்ளது. எனவே நாம் நம் அடுத்தகட்ட வேலைகளில் ஈடுபட்டு போராட்ட களம் காண்பதற்கு தயாராக வேண்டிய அவசியமும் அவசரமும் எழுந்துள்ளது. நாம் நம் உரிமைகளை இலகுவாக பெற்றுவிட முடியாது என்பதைத்தான் அரசாங்கத்தின் மௌனம் உணர்த்துகிறது. எனவே நம் உரிமைகளுக்காக தோள் கொடுப்போம். தேவைப்பட்டால் போராட்ட வாளெடுப்போம். நம்முடைய தடுக்கப்பட்ட உரிமைகளை பறிக்கப்பட்ட சலுகைகளை திரும்பப்பெற சமரசமற்ற போரை மீண்டும் துவக்குவோம். ●

கட்டுரை



# வரலாற்று நாயகன் பிடல் காஸ்ட்ரோ

**- பெரணமல்லூர் சேகரன்**

பிடல் காஸ்ட்ரோ 1926-ம் ஆண்டு ஆகஸ்டு 13-ந்தேதி கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தந்தை ஏஞ்சல் காஸ்ட்ரோ ஸ்பெயின் நாட்டுக்காரர். தாயார் லினா கியூபாவைச் சேர்ந்தவர்.

வசதியான விவசாய குடும்பத்தில் பிறந்த பிடல் காஸ்ட்ரோ ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் மற்றும் சமூக அறிவியல் பட்டப்படிப்பு படித்தபோது அவருடைய சிந்தனை அமெரிக்காவுக்கு எதிராக திரும்பியது. அமெரிக்காவின் கைப்பாவையாக செயல்பட்ட சர்வாதிகாரி பாடிஸ்டாவின் ஆட்சிக்கு எதிராக புரட்சியாளராக மாறினார். 1953-ம் ஆண்டு இளைஞர்களைத் திரட்டி கிழக்கு நகரான சாண்டியாகோவில் அரசுக்கு எதிராகப் போராடினார். இதில் அவருக்குத் தோல்வியே கிடைத்தது. இதனால் பிடல் காஸ்ட்ரோவும் அவருடைய தம்பி ரவுலும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். நீதிமன்றத்தில் 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' எனும் புகழ்பெற்ற பிடல் காஸ்ட்ரோவின் ஆவேசமான உரை நீதிபதிகளின் மனதைக் கரைய வைத்தது. இதனால் 1955-ம் ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதன்பிறகுதான் பிடல் காஸ்ட்ரோவின் வாழ்க்கையில் பல அதிரடி திருப்பங்கள் ஏற்பட்டன. மெக்சிகோ நாட்டில் அடைக்கலம் புகுந்த அவர் தென் அமெரிக்காவின் இன்னொரு புரட்சியாளரான சேகுவேராவுடன் இணைந்து புரட்சிக்கு குழு ஒன்றை உருவாக்கினார். 1956-ல் பாய்மரப் கப்பல் மூலம் நாடு திரும்பினார்.அவருடைய குழுவினர் திட்டமிட்டபடி கியூபாவுக்குள் ஒரே இடத்தில் கப்பல்களை கரைக்குக் கொண்டு தரையிறங்க முடியவில்லை. வெவ்வேறு திசைகளில் சென்று விட்டனர். எனினும், கியூபாவின் கிழக்குப் பகுதியான சியர்ரா மாஸ்ட்ரா மலைப்பகுதியில் பிடல் காஸ்ட்ரோவின் புரட்சிக் குழுவிற்கு அமோக ஆதரவு கிடைத்தது. 3 ஆண்டுகள் பாடிஸ்டாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக காஸ்ட்ரோவின் கொரில்லாப் படைகள் போராடின. அவருடைய புரட்சிப் படைகள் தலைநகர் ஹவானாவை 1959-ம் ஆண்டு ஜனவரி 8-ந்தேதி கைப்பற்றின. அதைத்தொடர்ந்து பிரதமர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு அதிபராகவும் ஆனார். நாடு ஜனநாயகப் பாதைக்குத் திரும்பும் என காஸ்ட்ரோ அறிவித்ததால் அமெரிக்கா முதலில் அவருக்கு ஆதரவு தெரிவித்தது. ஆனால் அடுத்த சில மாதங்களில் கடுமையான பொருளாதார சீர்திருத்தத்தை காஸ்ட்ரோ கியூபாவில் மேற்கொண்டார். கியூபாவின் வளர்ச்சியில் எரிச்சலடைந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் கியூபாவைக் கபளீகரம் செய்ய தொடர்ந்து முயற்சி செய்தது.

பிடல் காஸ்ட்ரோவைக்கொல்ல சதித்திட்டங்கள் அரங்கேறின. கியூபாவில் இருந்து வெளியேறி நாடு கடந்த நிலையில் இருந்தவர்கள் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் உதவியுடன் வளைகுடாவை ஆக்கிரமித்து நெருக்கடி கொடுத்தனர். அதை காஸ்ட்ரோ தோற்கடித்தார். அமெரிக்காவின் முக்கிய எதிரியான சோஷலிச சோவியத் ரஷ்யாவின் பக்கம் சேர்ந்தார். விரைவிலேயே அமெரிக்காவுக்குச் சவாலாகவும் திகழ்ந்தார். ஆப்பிரிக்காவில் விடுதலைக்காகப் போராடிய புரட்சிக் குழுக்களுக்கு ஆதரவாக தனது நாட்டின் குழுக்களை இவரும் சேகுவேராவும் இணைந்து அனுப்பினர். இந்த ஆதரவு 1977-ம் ஆண்டு வரை தொடர்ந்தது. இதற்கிடையே, 1962-ல் சோவியத் ரஷ்யாவின் அணுசக்தி ஏவுகணைகளைக் கியூபாவில் நிலை நிறுத்த உடன்பட்டதால் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜான் எப். கென்னடி பகிரங்கமாகவே ரஷியா மீது குற்றம்சாட்டி கியூபா அருகே எந்த போர்க்கப்பலையும் நிறுத்தக் கூடாது என்று தடை விதித்தார். இதனால் பல வாரங்கள் கியூபா கடற்பகுதியில் பதற்றம் நீடித்தது.

பின்னர், அப்போதைய ரஷ்ய அதிபர் குருஷேவ், அணுசக்தி ஏவுகணைகளை கியூபாவில் இருந்து

திரும்பப் பெற்றார். இதனால் அணு ஆயுதப் போர் மூளும் அபாயம் நீங்கியது. என்றபோதிலும் கியூபாவின் மீதான அமெரிக்க வன்மம் அதிகரித்தது. ரஷியாவுடன் சேர்ந்து கொண்டு தனது நாட்டை எதிர்க்கத் துணிந்ததால் பிடல் காஸ்ட்ரோவை பதவியில் இருந்து வெளியேற்ற அமெரிக்கா துடித்தது. முதல் நடவடிக்கையாக கியூபாவிடம் இருந்து சர்க்கரை கொள்முதலை நிறுத்திக் கொண்டது. பதிலுக்கு காஸ்ட்ரோ அமெரிக்கர்களின் ஒரு பில்லியன் சொத்துகளை முடக்கினார். இதனால் அமெரிக்கா- கியூபா மோதல் மேலும் அதிகரித்தது. கியூபா மீது அமெரிக்கா வர்த்தக தடைகளை விதித்தது.

பிடல் காஸ்ட்ரோவைத் தீர்த்துக் கட்டுவதற்காக 638 சதித்திட்டங்களை அமெரிக்கா தீட்டி அதைக் கியூபாவில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் வழியாக அரங்கேற்றவும் முயற்சித்தது. என்ற போதிலும் சதிவேலைகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன. அமெரிக்காவின் ஒவ்வொரு முயற்சியையும் அவர் துணிச்சலாக முறியடித்தார். பொருளாதாரத் தடைகளையும் கியூபா மக்களின் ஒருமித்த ஆதரவால் வெற்றிகரமாக சமாளித்தார். தனது ஆட்சிக் காலத்தில் 11 அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு அவர் சுமார் 50 ஆண்டுகள் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். வெளிநாட்டு முதலாளிகளையும், தனியார் நிறுவனங்களையும் கியூபாவில் தொழில் தொடங்க அனுமதித்தது கியூபா. இந்நிலையில் கியூபாவிடம் இருந்து விலகி நின்ற தென் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய உறவை மீண்டும் புதுப்பித்துக் கொண்டன. 1998-ம் ஆண்டு போப் ஆண்டவர் இரண்டாம் ஜான்பால் அந்நாட்டு பயணம் செய்தார். கியூபாவிற்குச் சுற்றுலா வருவோரின் வெளிநாட்டு எண்ணிக்கை அதிகமாகி அந்நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறத் தொடங்கியது. அதே நேரம் அரசின் மீதான பிடல் காஸ்ட்ரோவின் பிடியும் உறுதி பெற்றது. 2006-ல் அவருக்கு குடல் பிரச்சினையால் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அதிகாரப் பொறுப்பை 2008-ம் ஆண்டு தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோ வசம் அவர் ஒப்படைத்தார்.

பிடல் காஸ்ட்ரோ 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் நாள் மறைந்தார்.பிடல் காஸ்ட்ரோவின் மரணத்தால் கியூபா நாடே சோகத்தில் மூழ்கியது. இதுபற்றி ஹவானா நகரில் 22 வயது நர்சு தயான் மாண்ட்ல்வோ கூறும்போது, "இது மிகப்பெரிய துயரம். நாங்கள் எல்லாம் அவருடைய காலத்தில் பிறந்து வளர்ந்தோம். அவருடைய மரணத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை" என்றார். மெக்சிகோ ஜனாதிபதி என்ரிக் பெனா நியட்டோ டுவிட்டர் பதிவில், "பிடல் காஸ்ட்ரோவின் மரணம் என்னைப் புலம்ப வைத்துள்ளது. 20-ம் நூற்றாண்டின் மிகப்பெரிய புரட்சி வீரராக அவர் திகழ்ந்தார்" என்று குறிப்பிட்டார். கியூபாவின் விடுதலைக்கான அவருடைய இள வயது போராட்ட வாழ்க்கையும், அமெரிக்கா மீது எந்தவொரு நாட்டின் அதிபரும் காட்டாத, காட்டத் துணியாத எதிர்ப்பை பிடல் காஸ்ட்ரோ வெளிப்படுத்தியதும் புரட்சி வாழ்க்கைக்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்ததும் பிடல் காஸ்ட்ரோவின் பெயருடன் உலக வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பது நிச்சயம்.

பிடலின் பெரு முயற்சியால் பொருளாதாரத் தடையையும் மீறி கியூபா அபரிதமான வளர்ச்சி கண்டது. கியூபாவின் 'சோஷலிசம் அல்லது மரணம்' எனும் லட்சியத்துடன் கியூபர்களின் அளப்பரிய உழைப்பாலும் கொள்கை உறுதியாலும் சர்க்கரைக் கிண்ணமான கியூபா நிகரற்று விளங்குகிறது. உலகின் மிகச் சிறந்த மருத்துவத்தை கியூபா அந்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் பிற நாடுகளுக்கும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. ●

## “பஞ்ச்”

மொரப்பா

மூன்று நாட்களாக
பசி இல்லை
மருந்து கொடுங்கள்
டாக்டரிடம் கேட்டார்
பணக்காரர்

அந்த வியாதி
எனக்கு வராதா டாக்டர்
என கவலையுடன்
கேட்டார் ஏழை

கட்டுரை



# பிரிட்டன் புதிய பிரதமர் ரிஷி சுனக் ‘இந்தியாவின் பெருமிதம்’?

- மனோஹரி

பிரிட்டனில் கடந்த ஆறு ஆண்டுகளில் ஐந்தாவது பிரதமராக ரிஷி சுனக் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் பிரிட்டனின் பிரதமராகியிருப்பதற்காக இந்தியர்கள் மகிழ்ச்சி கொள்ளலாமே தவிர அவருடைய முன்னெடுப்புகளும், சித்தாத்தங்களும் சோசலிசத்திற்கு எதிரானவையாகவே இருக்கின்றன என்பதையே அவருடைய நடவடிக்கைகள் காட்டுகின்றன.

பிரிட்டனுக்கு அகதியாக வந்த குடும்பத்தைச் சேர்ந்த ரிஷிசுனக் அந்நாட்டின் உச்சபட்ச பதவியான பிரதமர் பதவியில் உட்காருவது பிரிட்டனின் பன்முகத்தன்மையை காட்டுகிறது என பலர் கூறுகின்றனர். இந்திய வம்சாவளி ஒருவர் அங்கே பிரதமராவதை ''இந்தியாவின் பெருமிதம்'' என்று ஆர்எஸ்எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் புளங்காகிகதம் அடைகிறார்கள். பிரதமரோ ''வாழும் பாலம்'' என்று ரிஷி சுனக்கை வர்ணிக்கிறார். இதே ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக-வினர்தான், இந்தியக் குடிமகனை மணந்து இந்திய குடியுரிமை பெற்ற சோனியா காந்தியை 'இத்தாலியர்' என இகழ்ந்து அவர் பிரதமர் ஆவதைத் தடுக்கும் கைங்கர்யத்தையும் மேற்கொண்டார்கள். 'இத்தாலியப் பெண் இந்தியாவுக்கு பிரதமராவதா?' என ஒரு பெரிய இழிவு பிரச்சாரத்தை பா.ஜ.கவினரும் சங்பரிவாரத்தினரும் முன்னெடுத்தனர். இதன் உச்சகட்டமாக சோனியா பிரதமரானால் நான் எனது தலைமுடியை மழித்துக்கொள்வேன் என சுஷ்மா சுவராஜ் சபதம் செய்தார். இந்த பின்னணியில்தான் மன்மோகன் சிங்கை பிரதமராக முன் நிறுத்தினார் சோனியா. இப்போது சங்கிகளின் இரட்டைவேடம் எத்தனை அற்பத்தனமானது என உலகிற்கு விளங்கியுள்ளது.

இந்திய வம்சாவளி என்பதைத் தாண்டி யார் இந்த ரிஷி சுனக் என்று பார்த்தால் அவர் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களிலேயே அதிக சொத்து உடையவர். இந்திய கார்ப்பரேட்டுகளில் ஒன்றான இன்போசிஸ் நிறுவனர் நாராயண மூர்த்தியின் மகளைத்தான் ரிஷி சனக் திருமணம் செய்துள்ளார். ரிஷி சுனக்கின் மனைவி வெகு நாட்களாக பிரிட்டனில் ஒரு பவுண்டுகூட வரி கட்டாமல் இருந்தார். இது அம்பலமானபோது ரிஷி சுனக்கின் அரசியல் வாழ்வே பெரிய கேள்விக்குள்ளாக்கப்பட்டது. இதற்காக ரிஷி சுனக்கும் அவருடைய மனைவியும் வருத்தம் தெரிவித்தனர். இந்தியாவின் மிகப்பெரிய செல்வந்தரின் மகள் மட்டுமல்ல பிரிட்டனின் நிதி அமைச்சராக இருந்தவரின் மனைவி வரி கட்டாமல் இருந்தது தற்செயலானது என்று எவராலும் நம்ப இயலுமா?

தொழிலாளி வர்க்க வட்டத்தில் ஒருவர் கூட தனக்கு நண்பர் கிடையாது என பெருமையுடன் குறிப்பிடும் ரிஷி சுனக் பிரிட்டனின் உழைப்பாளி மக்களின் பிரச்னைகளை உணர்வாரா? அவர்கள் பக்கம் நிற்பாரா? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. பிரிட்டனுக்கு வரும் அகதிகளை ருவாண்டா தேசத்துக்கு நாடு கடத்தும் ஒப்பந்தத்தை தீவிரமாக ஆதரித்தவர் ரிஷி. தானும் ஒரு

அகதியாக வந்தவர்தான் என்பதை மறந்து தான் பெற்ற வாய்ப்புகளை ஏனைய அகதிகள் பெறக்கூடாது என நினைக்கும் ஒரு அரசியல்வாதியாக உள்ளார் அவர். சீனா மற்றும் ரஷ்யப் பிரச்னைகளில் அமெரிக்காவின் கொள்கைகளை அப்படியே பின்பற்றுபவர் ரிஷி சுனக். பிரிட்டனின் நீண்டகால மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என சீனாவை சாடும் அவர், பிரிட்டனில் உள்ள 60 கன்பூசியஸ் கல்வி நிறுவனங்களை அப்புறப்படுத்துவேன் எனவும் கம்யூனிஸ்ட் கட்சியை ஒழிக்காமல் விட மாட்டேன் என்றும் சூளரைத்துள்ளார். டொனால்ட் டிரம்பும், ஜோ பைடனும் அடங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்யாத ஒன்றை தான் செய்யப் போவதாக கூறுவது அவரின் அரசியல் டிரெண்டாகவே பார்க்கப்படுகிறது.

ரிஷி சுனக் தீவிர தாராளமய கொள்கைகளின் ஆதரவாளர். பிரிட்டன் அரசின் இலவச மருத்துவ வசதிகளை தனியார் மயமாக்க வேண்டும் என்று கூறுபவர். பெரும் பணக்காரர்களுக்கு வரிச்சலுகைகளை அளிக்க ஆர்வமுள்ளவர். தொழிற்சங்கங்களின் போராட்ட உரிமைகளை சிதைக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர். பிரிட்டன் எங்கும் ரயில்வே, தபால், ஆசிரியர்போராட்டங்களை தீவிரமாக தொடங்கியுள்ளன. குறிப்பாக ரயில்வே தொழிற்சங்க உரிமைகளை நசுக்க அரசாங்கம் முக்கிய சட்டங்களை இயற்ற முனைந்துள்ளது. உலகின் உற்பத்தி மையமாக ஒரு காலத்தில இருந்த பிரிட்டன் இப்போது பெரும்பாலும் நிதி மூலதன சந்தையாக மாறிவிட்டது. மூன்றில் ஒரு பங்கு சிறு தொழில்கள் மூடப்பட்டுள்ளன. ரஷ்யா-உக்கிரைன் போர் பல பாதக பிரச்சனைகளை பிரிட்டனின் வாசற்படியில் கொண்டு வந்து சேர்த்துள்ளது. இதன் விளைவாக பெரும் நெருக்கடி மேகங்கள் பிரிட்டனை சூழ்ந்துள்ளன. கார்ப்பரேட்டுகளின் மாடலில் அரசாங்கத்தை நடத்த விரும்பும் ரிஷி சுனக் பிரிட்டனை மீட்டெடுப்பாரா அல்லது தேர்தல் நடந்தால் மக்களால் ஓரங்கட்டப்படுவாரா என்பதை காண உலகம் காத்திருக்கிறது. ●

கவிதை

# விழிப்பாய் நாட்டை காப்போம்!

**- ஆர்.நடராஜன்**

உறங்கும்போதும் விழிப்பாயிருப்போம்!
உயிர் போனபின்பும்
விதையாய் நாம் வாழ்ந்திருப்போம்!

தேசத்தை தீங்குகள் தீண்டினால்
தீச்சுடர் ஏந்தி எதிர்த்து நிற்போம்!

கண் இமைக்கும் நேரம்தான்
களவு போகும் தேசத்தின் வளம்.

நடக்கும் சாலை, பறக்கும் விமானம்
மிதக்கும் துறைமுகம்
எல்லாம் விற்பனைக்கெனில்
எதுதான் மிஞ்சும் நம் தேசத்தில்?

புயலுக்கும் சூறாவளிக்கும் மட்டுமல்ல
மதவெறிக்கும் எச்சரிக்கை கூண்டு
ஏற்றியே தீரவேண்டும்.

மசூதி, கோயில், தேவாலயத்தில்
மாடப்புறாக்கள் ஒன்றாய்
சேர்ந்து சிறகசைக்கையில்.....
மனிதருள் பிளவை தடுப்போம்!

கொல்லைப்புறமாய் எட்டிப்பார்க்கும்
வழக்கொழிந்த மொழி
வஞ்சனை வலைக்குள் வீழாமல்
தாய்மொழி காக்க
வீரச்சமர் புரிவோம்.

வள்ளுவனுக்கு வண்ணம் பூசி
தோற்றவர்கள்
வள்ளுவத்துக்கு பொழிப்புரை எழுத
சாயச் சட்டியுடன் அலைகின்றார்.

எரிமலை குழம்பை எழுதுகோலில் நிரப்பி
கருத்துப் போரால் எதிர்கொள்வோம்!

உறங்கும்போதும் விழிப்பாயிருப்போம்.
உயிர் போனபின்பும்
விதையாய் நாம் வாழ்ந்திருப்போம்!

# தலைமைச் செயலக சங்கத்தின் புதிய தலைவர் தோழர். கு.வெங்கடேசன் அவர்களுடன் ஒரு சந்திப்பு

தொழிற்சங்கங்கள் மட்டுமல்ல, அரசியல் கட்சிகள், ஊடகங்கள், அரசியல் விமர்சகர்கள் அனைவராலும் சென்ற மாதம் (செப்டம்பர் 2022) உற்று நோக்கப்பட்ட முக்கியமான விஷயம் தலைமை செயலக சங்கத் தேர்தல் முடிவுகள். நான்கு அணிகளாக போட்டியிட்டவர்களில் யாரும் எதிர்பாராத விதமாக அகரம் அணியின் அனைத்து போட்டியாளர்களும் பிரம்மாண்ட வெற்றி பெற்றுள்ளனர். கம்யூனிச சாயல் கொண்ட அணி என்பதால் அந்தக் அணியினர் பொறுப்புக்கு வந்தால் தலைமைச் செயலக ஊழியர்களை போராட்டம் ஆர்ப்பாட்டங்களுக்குள் இறக்கி விட்டுவிடுவர் என்பதால் அவர்கள் வர வாய்ப்பில்லை என்று கூறப்பட்ட நிலையில் அகரம் அணியின் ஒவ்வொரு போட்டியாளரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைக் பெற்று மகத்தான வெற்றி பெற்றுள்ளனர். உளவுப் பிரிவினரால் கூட அகரம் அணி வெற்றிபெறுவர் என கணிக்க முடியாத நிலையில் இந்த மாபெரும் வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றி தலைமைச் செயலக ஊழியர்களின் மன மாற்றத்தைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. இந்த வெற்றி குறித்து பலவிதமாக ஊகங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அது குறித்த உண்மைகளை அதன் தலைவரிடமிருந்து தெரிந்து கொள்வதை விட சிறந்தது என்னவாக இருக்க முடியும். அதனால் தலைமைச் செயலக சங்கத் தலைவராக பொறுப்பேற்றுள்ள தோழர் வெங்கடேசன் அவர்களிடம் நேரடியாகவே சில கேள்விகளை வைத்தோம்.

கேள்வி: உண்மையிலேயே இவ்வளவு பெரிய வெற்றி கிடைக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா?

பதில்: சங்கத் தேர்தலில் பெற்ற வெற்றி என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். நடந்து முடிந்த தேர்தரில் நான்கு அணிகளாகப் போட்டியிட்டதால் வெற்றியின் வேறுபாடு சற்று குறைந்து விட்டது. மூன்று அணிகளாகப் போட்டியிருந்திருந்தால் இன்னும் அதிகளவு வித்தியாசத்துடன் அகரம் அணி வெற்றி பெற்றிருக்கும் என்பதுதான் எனது கணிப்பு. அதோடு மட்டுமல்லாமல், கடந்த ஐந்தாண்டுகளில் சங்கத்தின் மாண்பானது மிகவும் மோசமான நிலைக்குச் சென்றதால், மாண்பினை மீட்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தலைமைச் செயலக ஊழியர்கள் இந்தத் தேர்தலை எதிர்கொண்டதால், இந்த வெற்றி என்பது சாத்தியம் என முன்கூட்டியே நான் கணித்திருந்தேன்.

கேள்வி: திடீரென்று இந்த மாற்றம் நிகழ்ந்திருக்குமா? தலைமைச் செயலக ஊழியர்களின் இந்த மனமாற்றத்திற்கு காரணம் உங்கள் தனிப்பட்ட செல்வாக்கா? அல்லது வேறு ஏதேனும் காரணமா?

பதில்: திடீரென்று இந்த மாற்றம் என்பது நிகழ்வதற்கான வாய்ப்பு என்பது இல்லை. தலைமைச் செயலக ஊழியர்களின் மனமாற்றத்திற்கு காரணம் என் மேல் உள்ள செல்வாக்கு என மட்டும் சொல்லி விட முடியாது. கடந்த தேர்தலில் கூட குறைவான வாக்கு வித்தியாசத்தில் தான் அகரம் அணி வெற்றி வாய்ப்பினை நழுவவிட்டது. அதற்கு பல்வேறு காரணிகள் இருந்தன. ஆனால், கடந்த தேர்தலில் சரியான முறையில் நிர்வாகிகளைத் தேர்வு செய்யாததனை ஊழியர்கள் தேர்தல் முடிந்த சில மாதங்களுக்குள்ளாகவே உணர்ந்திருந்தனர்.

கேள்வி: ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பில் நீங்கள் ஒருங்கிணைப்பாளராக இருப்பதனால் இந்த வெற்றி சாத்தியமாகியிருப்பதாக சிலர் கூறுவது உண்மையா?

பதில்: நான் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பில் ஒருங்கிணைப்பாளராக இருப்பதனால் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ச்சியாக போராட்டக் களத்தில் செயல்பட்டதும், அதில் நான் முழுமையாக என்னை இணைத்துக் கொண்டதும் இந்த வெற்றிக்கு காரணமாக இருந்திருக்கக் கூடும் என்பதனை மறுப்பதற்கில்லை.

கேள்வி: நீங்கள் கம்யூனிச நிலைப்பாடு உள்ளவர், நீங்கள் வெற்றிபெற்று வந்தால் போராட்டம் ஆர்ப்பாட்டம் வேலை நிறுத்தம் என ஊழியர்களை திசை திருப்பி விடுவீர்கள் என்றெல்லாம் செய்யப்பட்ட பிரச்சாரங்கள் பொய்த்துப் போனதற்கு காரணம் என்ன?

பதில்: நான் கம்யூனிச கொள்கையினை பின்பற்றுபவன், அதனால் கோரிக்கைகளை வென்றெடுக்க ஊழியர்களைப் போராட்டப் பாதையில் தள்ளிவிடுவேன் என்று என்மீது நெடுங்காலமாக ஒரு விஷமப் பிரச்சாரம் தொடந்து முன் வைக்கப்பட்டு வருகிறது. இடதுசாரி சித்தாந்த புரிதல் இருந்தால்தான், தொழிற்சங்க நடவடிக்கைகளில், தந்தை பெரியார் அவர்கள் கூறியதுபோல், சுயமரியாதையுடன் சங்க நடவடிக்கைகளை கொண்டு செல்ல முடியும். நமது உரிமைகளை அரசிடம் எந்தவகையில் அதாவது ஜனநாயக அடிப்படையில் கேட்க வேண்டுமோ அதன்படி கேட்டுப் பார்ப்போம். நமது நியாயமான கோரிக்கைகளை ஆளுகின்ற அரசு நிறைவேற்ற மறுக்கும் போது, அரசியலமைப்பு நமக்கு வழங்கிய ஜனநாயக வழிகளை, போராட்டங்களை நடத்துவது என்பது, ஊழியர்கள் பால் நம்பிக்கையுள்ள சுயமரியாதையுடன் செயல்படுகின்ற அனைத்து ஜனநாயக அமைப்புகளும் மேற்கொள்கின்ற நடவடிக்கைதான். இதில் தலைமைச் செயலகச் சங்கம் ஒன்றும் விதிவிலக்கல்ல.

கேள்வி: நீங்கள் சிரத்தை எடுத்து பிரச்சாரம் செய்யவில்லை என்றும், கடைசி நேரத்திலேயே அணி அமைத்ததாகவும் நீங்கள் தலைமைச் செயலகத்திற்குள் பணியில் இல்லாததால் வெற்றிபெறும் அளவிற்கு உங்களுக்கு வாக்கு வங்கியில்லை என்றெல்லாம் எழுப்பப்பட்ட வியாக்கியானங்கள் குறித்து உங்கள் பார்வை என்ன?

பதில்: இந்தத் தேர்தலில் நான்கு அணிகள் போட்டியிட்டன. நாங்கள் அகரம் அணி என்ற அமைப்பு மூலமாக களம் கண்டோம். இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை, எங்கள் அணியினைத் தவிர பிற அணிகள் அனைத்துமே பிரச்சாரத்தினை இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே தொடங்கி விட்டார்கள். எங்களது அணியின் சார்பாக களம் கண்டவர்களுக்குக் கூட நான் தலைமைச் செயலகம் வந்து உரிய நேரத்தில் பிரச்சாரத்தினைத் தொடங்வில்லை என்ற வருத்தம் இருந்தது. பலமுறை இதை என்னிடம் தெரிவித்தும் வந்தனர். என்னைப் பொறுத்தவரை, தலைமைச் செயலகச் சங்கத் தேர்தல் களத்தினை முழுமையான அறிந்தவன் என்ற அடிப்படையில், வழக்கமாக மூன்று நாட்கள் தலைமைச் செயலக வளாகத்தில் களத்தில் உறுப்பினர்களை நேரிடையாகச் சந்தித்து, பிரச்சாரத்தினை மேற்கொண்டாலே அனைத்து ஊழியர்களையும் சந்தித்து நமது கருத்தினை எடுத்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை முழுமையா களனக்கு இருந்ததன் அடிப்படையில், அந்தத் தேர்தல் உத்தியினைக் கையாண்டேன். எனது உத்தி என்பது சரியானது என்பதனை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

அதோடு மட்டுமல்லாமல், பிற அணிகள் நான் தலைமைச் செயலத்தில் நிதித்துறையில் பணியாற்றினாலும், தலைமைச் செயலக வளாகத்தில் பணியாற்றாததால் இவர் தேர்வானாலும் சங்கப் பணிகளை மேற்கொள்ள மாட்டார் என்பது போன்ற பிரச்சாரங்களைகளத்தில் கட்டவிழ்த்து விட்டனர். என்னைப் பொறுத்தவரை, நான் எங்கிருந்தாலும், ஊழியர்களுக்கு பாதிப்பு என்றால் கண்டிப்பாகக் களத்தில் இருப்பேன்

என்பதனை கடந்த கால நிகழ்வுகளால் நான் நிரூபித்துக் காட்டியிருக்கிறேன். ஆதனால் ஊழியர்கள் இந்த விஷமப் பிரச்சாரத்தினை பெரிதாக எடுத்துக் கொள்ள வாய்ப்பில்லை என ஊகித்தேன். ஊழியர்களும் அதனை தங்களது வாக்கின் மூலமாக தெளிவுபடுத்திவிட்டனர்.

*கேள்வி: தலைமைச் செயலக ஊழியர்களுக்கு செய்ய வேண்டிய முழு முதற் கடமையாக நீங்கள் எதைச் சொல்வீர்கள்?*

பதில்: சங்கத்தின் தலைவராக நான் முதலில் செய்ய வேண்டிய முதன்மையான பணி என்பது சங்கத்தின் மாண்பினை மீட்டெடுப்பதாகும். நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேலாகி உள்ள நிலையில், சங்கத்துடனான அரசின் மற்றும் அரசு அதிகாரிகளின் அணுகுமுறையினை பார்க்கையில், சங்கத்தின் மாண்பு என்பது மீட்டெடுக்கப்பட்டுள்ளது என்பதனை நன்கு உணர முடிகிறது.

*கேள்வி: தலைமைச் செயலக சங்க தலைவராக நீங்கள் செய்ய நினைத்துள்ள விடயங்கள் என்ன?*

பதில்: சங்கத்தின் தலைவர் என்ற முறையில் தனிப்பட்ட செயல்பாடுகள் என்பது என்றைக்கும் இருக்காது. சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரின் ஒருமதித்த கருத்தோடுதான் அனைத்து விடயங்களையும் அணுகுவது என்று முடிவு செய்து செயலாற்றி வருகிறோம். தனிப்பட்ட ஒருவனால் எதனையும் சாதிக்க முடியாது என்ற திடமான நம்பிக்கை எனக்கு உண்டு. அமைப்பாக ஒற்றுமையாக ஒருமித்தக் கருத்தோடு செயல்படும் போதுதான் நமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும். அந்தவகையில், அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் சங்கத்தின் செயல்பாடுகளில் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் செயல்திட்டங்களை மேற்கொள்ள உள்ளோம். தற்போது தேர்வாகியுள்ள செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் ஆற்றல் மிக்கவர்கள் என்பதோடு பல்வேறு சங்க நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள தயாராக உள்ளனர்.

*கேள்வி: பிற சங்கங்களுடன் உங்கள் சங்கம் எப்படி பயணிக்கும்?*

பதில்: பிற சங்கங்களோடு எப்போதும் போல் நட்புணர்வோடு பயணிப்போம். கடந்த கால நிகழ்வுகளை வைத்து எந்த பேதமையும் பார்க்க மாட்டோம். அனைத்து அமைப்புகளையும் ஒருங்கிணைத்தால் தான் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை வென்றெடுக்க முடியும் என்ற புரிதலின் அடிப்படையில்தான், 2017ல் நான் சங்கத்தின் செயலாளராக இருந்தபோது தலைமைச் செயலச் சங்கமானது ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பினை உருவாக்கியது. அதன்பின் எங்களது சங்கத்திற்குத் தேர்தல் நடந்து ஏற்பட்ட மாற்றங்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். தொடர்ந்து இயக்க நடவடிக்கைகளில் விடுபட்ட ஓதுங்கி நிற்கும் அமைப்புகளை ஒன்றிணைத்து நமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை தலைமைச் செயலகச் சங்கம் மேற்கொள்ளும்.

*கேள்வி: தலைமைச் செயலக சங்கத்தின் மற்ற தலைவர்களைப் போலவே இருப்பீர்களா? அல்லது உங்களுக்குகென்று தனி பாணி அமைப்பீர்களா? அப்படி என்றால் அது என்ன?*

பதில்: தனி பாணி செயல்பாடு என்ற ஒன்றில்லை. அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்படும் பாணிதான் எங்களுடையது.

*கேள்வி: உங்கள் சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?*

பதில்: சங்கத்தின் ஆயுட்காலத்தினை மீண்டும் இரண்டாண்டுகளாக மாற்றுவோம் என்று வாக்குறுதியினை தேர்தலின்போது அளித்தோம். சங்கத்தின் முதலாவது செயற்குழுக் கூட்டத்திலேயே அதற்கான தீர்மானம் என்பது நிறைவேற்றப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல், சங்கத்தின் விதிகளில் உரிய மாற்றங்கள் கொண்டுவந்து, அதனை பொதுக்குழுவின் ஒப்புதலோடு விரைவில் நிறைவேற்றுவோம். அதோடு மட்டுமல்லாமல், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை உணவு இடைவேளைக் கூட்டங்கள் நடத்தி, அதில் எங்களது செயல்பாடுகளையும் கோரிக்கைகளின் மீதான நிலவரத்தையும் ஊழியர்களிடம் விளக்கி,

அடுத்த கட்ட செயல்பாடுகளை இறுதி செய்வோம்.

மாற்றங்கள் கொண்டு மற்றப்பட்டுள்ளது. அதோடும் தவது செயற்குழுக் கூட்டத்திலேயே

கேள்வி: முதல்வர் அமைச்சர் பெருமக்கள் துறைச் செயலாளர் இவர்களுடன் உங்கள் அணுகுமுறை எப்படியானதாக இருக்கும்?

பதில் : மாண்புமிகு தமிழக முதலமைச்சர். அமைச்சர்கள் மற்றும் துறைச் செயலாளர்களுடனான எங்களது அணுகுமுறை என்பது சுமூகமானமுறையில் இருக்கும். அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் என்றைக்கும் அரசுக்கும் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்குமான உறவு என்பது நல்லுறவாகவே இருக்கும். தலைமைச் செயலக ஊழியர்களுக்கான கோரிக்கைகளில் எந்தவித சமசரப் போக்கிற்கும் இடம் கிடையாது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு ஊழியர்கள் மீதான நம்பிக்கையும் கனிவும் அளப்பிடற்கரியது. கண்டிப்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதிகளையும் கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்றுவார் என்கிற நம்பிக்கை அனைத்துத் தலைமைச் செயலக ஊழியர்களுக்கும் உள்ளது.

கேள்வி: உங்களுக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்த உங்கள் சக ஊழியர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் கருத்துக்கள் ஏதேனும் இருந்தால் கூறுங்கள்.

பதில்: தலைமைச் செயலகச் சங்கம் என்பது பதிவேடு எழுத்தர் முதல் கூடுதல் செயலாளர் வரை அனைத்து நிலைப் பணியாளர்களையும் உள்ளடக்கிய ஒரு உன்னதமான அமைப்பு. எங்களைப் பொறுத்தவரையில், அனைத்து நிலைப் பணியாளர்களையும் எந்த வேறுபாடின்றி நடத்துவோம் என்பதோடு, அனைவரது கோரிக்கைகளையும் அரசிடம் உரிய முறையில் எடுத்துச் சென்று, பணியாளர்களின் சுயமரியாதையினை காத்து, கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

**சந்திப்பு: தெ.வாசுகி** ●

---

# புதிய நிர்வாகிகளை வாழ்த்துகிறோம்

## தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் புதிய நிர்வாகிகள்

**மாநில தலைவர்:**

**திரு ஜெ. ராஜா,**

**பொதுச் செயலாளர்:**

**திரு. அண்ணா. குபேரன்,**

**மாநில பொருளாளர்:**

**திரு ஞா. ஸ்டான்லி,**

**மாநில துணைத் தலைவர்கள்:**

**திரு பி. அப்பாஸ்,**
**திரு எஸ். முருகேசன்,**
**திரு வி. சரவணன்,**
**திரு கே. செந்தில்முருகன்,**
**திரு இரா. தர்மராஜ்**

**மாநில செயலாளர்கள்:**

**திருமதி ஆ. பேபி,**
**திருமதி ஆர். கல்பனா,**
**திரு .முத்துமுனியாண்டி,**
**திரு த. சக்திவேல்,**
**திரு த. சதீஷ்குமார்.**

# பெருந்தில் முறையீடு
# தமிழ்நாடு சாலை ஆய்வாளர் சங்கம்

பாலியல் அத்துமீறல்களில் ஈடுபடும் அதிகாரிகளை முச்சந்தியில் நிறுத்துவோம்: சாலை ஆய்வாளர் ஆர்ப்பாட்டத்தில் மு.அன்பரசு எச்சரிக்கை சென்னை, அக். 18.

பாலியல் அத்துமீறல்களில் ஈடுபடும் அதிகாரிகளை முச்சந்தியில் நிறுத்துவோம் என சாலை ஆய்வாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு. அன்பரசு எச்சரித்தார். பெண் சாலை ஆய்வாளரை துன்புறுத்தும் புதுக்கோட்டை கோட்டம் கீரனூர் பிரிவு இளநிலை பொறியாளர் சாலை சிவபாதம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு சாலை ஆய்வாளர்கள் சங்கம் சார்பில் சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் அலுவலகம் முன்பு செவ்வாயன்று (அக். 18) ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசுகையில், அரசு அலுவலகங்களில் பெண்கள் மீதான பாலியல் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் பங்கேற்ற 500 பேரில் 350 பேர் அலுவலகங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதாக தெரிவித்துள்ளனர். அதிகாரிகள் அலுவலகத்தில் சிசி டிவி கேமராவை பொருத்திக் கொண்டு அதன் வழியாக பணிக்கு வரும் பெண்களை ரசிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்று பாலியல் அத்துமீறல்களில் ஈடுபடும் அதிகாரிகளை பட்டியலிட்டு விரைவில் முச்சந்தியில் நிறுத்துவோம் என எச்சரித்தார்.

சாலை ஆய்வாளர் பணியிடங்களை நிரப்பாமல் ஒழித்துக்கட்டிவிட்டு அதிகாரிகள் பல பதவி உயர்வுகளை பெற்று விட்டார்கள். இதில் பணிபுரியும் 90 விழுக்காட்டினர் புதிய ஓய்வூதிய திட்டத்தில் உள்ளனர். அதுபோல் ஒட்டுமொத்தமாக 6 லட்சம் பேர் இந்த புதிய ஓய்திய திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை ஓய்வுபெற்ற 30 ஆயிரம் பேர் ஓய்வூதியம் இல்லாமல் கடும் அவதிப்படுகின்றனர். சிலர் வீட்டு வேலைக்கு செல்லும் அவல நிலை உள்ளது. இறுதிகாலத்தில் கவுரமாக வாழ முடியாத நிலையை உருவாக்கி விட்டார்கள். அரசு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த தவறுமேயானால் அரசு ஊழியர் சங்கமும், ஜாக்டோ ஜியோவும் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கும் என்றார்.

இளநிலை பொறியாளர் மற்றும் வரைவு அலுவலர்க்கு உரிய அரசாணை இருந்தும் பதவி உயர்வு வழங்காமல் காலதாமதம் செய்வதை கைவிட வேண்டும், அரசாணை நிலை எண் 555இன்படி சாலை ஆய்வாளர் பணியிடத்தை தமிழக அரசின் நிரந்தர பணியிட வரிசையில் கொண்டுவர வேண்டும், தற்காலத்திற்கு உடன்படாத மிதிவண்டி படியை மாற்றி அரசாணை 307இன்படி இருசக்கர வாகன படி வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.மாநிலத் தலைவர் ஏ. சுரேஷ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் தா.திருமுருகன், மாநில பொருளாளர் வி. செல்வராஜ் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்க மாநிலத் தலைவர் எஸ்.கண்ணன், பொதுச்செயலாளர் ஆர்.தீபக், சாலைப் பணியாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆ.அம்சராஜா ஆகியோரும் பேசினர். இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே முதன்மை இயக்குநர் குமார் சங்க நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது பதவி உயர்வுக்கான பட்டியலை தயார் செய்து விரைவில் அறிவிப்பதாகவும், பிற கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். ●

கட்டுரை

# கல் உப்பா? அயோடின் கலந்த உப்பா? எந்த உப்பை பயன்படுத்துவது?

மரு.சா.காமராஜ்

உப்பிட்டவரை உயிர் உள்ளவரை நினைக்க வேண்டும்! உப்பில்லாத உணவு, திண்பண்டத்தை குப்பையில் போடு என்பது பழமொழி! நாம் உண்ணும் உணவாகட்டும் திண்பண்டங்களாகட்டும் உப்பு இல்லையென்றால் ருசிக்காது. ஆறு சுவையில் (இனிப்பு, புளிப்பு, கசப்பு, காரம், உப்பு, துவர்ப்பு) உப்புச் சுவையும் இருக்கிறது என்பதை அறிய வேண்டும். எனவே தான் சமையலில் உப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. உணவில் எந்த சுவை குறைந்தாலும் நோய் ஏற்படும் கூடினாலும் நோய் ஏற்படும். கடலில் இருந்து கிடைக்கும் உப்பில் 84 வகையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன என்றால் நம்ப முடிகிறதா?! நம்பித்தான் ஆகவேண்டும்.அதுதான் உண்மை.

ஒருவருக்கு ஒரு நாளைக்கு 2 (15 மைக்ரோ கிராம்) கிராம் அளவு உப்பே போதுமானது. பொதுவாக உப்பை சோடியம் குளோரைடு என்று கூறுவர். சாதாரண கல் உப்பில் சோடியம், பொட்டாசியம், இரும்புச்சத்து, கால்சியம் சத்து, பாஸ்பரஸ் சத்து, குரோமியம் சத்து, அயர்ன், துத்தநாகம், மெக்னீசியம் மற்றும் அயோடின் சத்துக்கள் இருக்கின்றன. உப்பில் உள்ள அயோடினை உலகில் எங்குமே யாரும் பிரித்து எடுப்பதில்லை. இதற்கு மாறாக தேவையான குறிப்பிட்ட அளவு அயோடினை சேர்க்கின்றனர்.

நம்முடைய முன்னோர்கள் மேற்கண்ட 84 வகையான சத்துக்கள் உள்ள கல் உப்பையே பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தனர். உப்புக்காக யுத்தங்கள் (போர்) நடந்தது என்றால் நம்ப முடிகிறதா?! பண்டமாற்று வியாபாரத்தில் உப்பிற்காக தங்கத்தை கொடுத்தார்கள் என்றால் உப்பின் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். கடல்நீரை பாத்திகட்டி உப்பு தயாரிக்கும் முறை கடலோர மாவட்டங்களில் (தூத்துக்குடி, வேதாரண்யம் மாவட்டங்களில்) இன்றும் இருந்து வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். உப்பானது மனிதனின் உடலில் உள்ள திரவ நிலையை(எலக்ட்ரோ லைட்ஸ்) சீராக வைத்திருக்க உதவுவது. நம் உடலின் தசை, நரம்பு, நாடி, இரத்த நாளங்களின் இயக்கத்திற்கு உப்புச்சத்து மிக மிக முக்கியமானது. ஒரு நாளைக்கு ஒருவருக்கு தேவைப்படும் உப்பின் அளவு அதிகபட்சமாக 6 கிராமிற்கு மேல் அதிகரிக்க கூடாது. மனித உடல் இயற்கையாக அயோடின் சத்தை உற்பத்தி செய்வதில்லை. நாம் உண்ணும் உணவின் மூலமாகத்தான் அயோடின் சத்தை இயற்கையாக நம்மால் பெறமுடிகிறது.கடல்நீரில் இருந்து பிரித்து எடுக்கப்படும் உப்பில்தான் அயோடின்,செலினியம் போன்ற 84 வகையான சத்துக்கள் நிறைந்துள்ளன. இதில் சோடியத்தை தவிர 83 சத்துக்களையும் அறவே நீக்கிவிட்டு குறைந்த அளவு அயோடினை மட்டுமே தற்போது சேர்க்கிறார்கள்.

ஏன் சோடியம் குளோரைடுடை மட்டும் நீங்குவதில்லை என்றால், பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் பிவிசி பைப் தயாரிக்கும் தொழிற்சாலைகள், காகித கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகள், குளோரின் தயாரிப்பு தொழிற்சாலைகள், உணவு பதனிடும் தொழிற்கூடங்கள் இவைகளுக்கு சுத்தமான சோடியம் குளோரைடு தேவைப்படுகிறது. இதற்காக ஒட்டுமொத்த உப்பையும் சுத்தம் செய்து சோடியம் குளோரைடு தவிர மீதமுள்ள 83சத்துக்களையும் அறவே நீக்குகிறார்கள் 94 பங்கு உப்பை தொழிற்சாலைகளுக்கும், மீதமுள்ள 6 பங்கு உப்பில் அயோடினையும் சேர்த்து வழங்குகிறார்கள். உப்பளங்களில் இருந்து கிடைக்கும் இயற்கை உப்பை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உபயோகித்து வந்த நாம் சுத்திகரிக்க வேண்டும் என்பது மேற்கண்ட காரணங்களுக்காகத்தான். இதற்கு

பிறகு தான் அயோடின் குறைபாடு நோய்கள் இன்று அதிகம் ஏற்பட தொடங்கிவிட்டது. இயற்கை உப்பில் இருக்கும் அயோடின் திடமானது, கரையாது! ஆனால் சாதாரண கல் உப்பில் கலக்கும் செயற்கை அயோடின் ஸ்திரமற்றது. கரையும் தன்மையுடையது. உப்பு பாக்கெட்டை திறந்து வைத்தால் அதில் உள்ள அயோடின் சத்துக்கள் ஆவியாகி விடும். தேவைக்கு அதிகமாக அயோடின் கலப்பதால் ஹசிமோட்டோஸ் எனும் ஆட்டோ இம்யூன் நோய் அதிகரிக்கிறது. தேவைக்கு அதிகமான உப்பை உணவில் சேர்த்துக் கொள்ளும்போது இதய நோய்,ரத்தக் கொதிப்பு, உடல் பருமன், சிறுநீரக பாதிப்பு, சர்க்கரை நோய் போன்றவை ஏற்படுகின்றன. எனவே உப்புகள் அதிகம் சேர்க்கப்படும் உணவு மற்றும் திண்பண்டங்களை குழந்தைகளுக்கு வாங்கி தரக்கூடாது.

அயோடின் உப்பு வேலை செய்வதற்கு செலினியம் என்ற தாது பொருள் வேண்டும். கடல் உப்பில் செலினியம் அதிக உண்டு. அயோடின் உப்பில் இல்லை. செலினியம் இல்லாத உப்பு தான் ஹஸிமோட்டோஸ் நோய் வரக் காரணமாகிறது. கல் உப்பு கடல்நீரில் இருந்து பிரித்து எடுக்கப்படுகிறது. டேபிள் சால்ட் என்பது கடல்நீரில் இருந்து மட்டுமின்றி பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பில் மிஞ்சும் கழிவுகளில் இருந்தும் இந்த உப்பு தயாரிக்கப்பட்டு பாலிஷ் செய்து பளபளப்பாக்குகின்றனர். நம்முடைய அன்றாட உணவு பொருட்கள் மூலமாக அயோடின் இயற்கையாகவே கிடைக்கிறது. மேலும் மீன் வகைகள்,முட்டை, பால், தயிர், போர், உருளைக்கிழங்கு, பீன்ஸ் வகைகள், வாழைப்பழம், கடல்பாசி, கத்தரிக்காய், முருங்கைக்காய், வெண்டைக்காய், அனைத்து கீரைகள், அனைத்து வகையான பழங்கள் என எல்லாவற்றிலும் அயோடின் சத்து இருக்கிறது.

கடல்சார்ந்த நிலப்பகுதியில் வளரும் கீரை,காய், பழம், கடல்வாழ் உயிரினங்களை உணவாக எடுத்துக் கொள்ளும் மக்களுக்கு தைராய்டு நோய் மற்றும் அயோடின் சத்து குறைபாடு பாதிப்புகள் ஏற்படுவதில்லை. கடல்சாரா இடங்களில் நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கே தைராய்டு நோய் மற்றும் அயோடின் சத்து குறைபாடு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இயற்கையாக கிடைக்கின்ற கல் உப்பை பயன்படுத்தினால் அயோடின் குறைபாடு ஏற்படுவதில்லை என்பதற்கு நம் முன்னோர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்ததே இதற்கு சான்று. என்றைக்கு சுத்திகரிக்கப்பட்ட உப்பை *(Refined)* நாம் பயன்படுத்த ஆரம்பித்தோமோ அன்றே அயோடின் சத்து குறைபாடும் அதைச் சார்ந்த நோய்களும் வர தொடங்கி விட்டது.

நாம் உண்ணும் உணவில் அயோடின் சத்து குறைபாடு இருந்தால் முன் கழுத்து கழலை *(Goitre)* நோய் உருவாகிறது. 1924 ஆம் ஆண்டு முதன் முதலாக அமெரிக்காவில்தான் அயோடைடு ரீபைண்டு உப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. முன் கழுத்து கழலை நோய் உள்ளவர்களுக்கு மேற்கண்ட உப்பை வழங்கி இந்த நோய் தாக்கத்தை குறைத்தனர். இதை அறிந்த இந்தியர்கள் அயோடைடு ரீஃபைண்ட் உப்பை பயன்படுத்த தொடங்கினர்.

மேலும் 85 க்கும் மேற்பட்ட உலக நாடுகள் அயோடைடு ரீபைண்டு உப்பை பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலமாக அயோடின் சத்து குறைபாடு இல்லாத மக்களும் மேற்கண்ட உப்பை பயன்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே அயோடின் சத்து மிகுதி காரணமாக வாய் மற்றும் தொண்டை எரிச்சல், தலைவலி வாயில் நீர் ஊறல், ஒழுங்கற்ற இதயத்துடிப்பு, சுவை மாற்றம், கை, கால் மரத்துப் போகுதல், நடுக்கம், உடல் வலி, கை பாதம் பலவீனமாக தோன்றுதல், பல் ஈறுகளில் புண்,வயிறு சம்பந்தமான பிரச்சினை, இரத்த கொதிப்பு நோய், சர்க்கரை நோய், சிறுநீரக பாதிப்புகள், தைராய்டு நோய்,தோல் நோய், நுரையீரல் பாதிப்பு போன்ற நோய்கள் தொடர்ந்து அயோடின் கலந்த உப்பை தொடர்ந்து உணவில் சேர்த்து வருவதில் மூலமே ஏற்படுகிறது என்பதை அறிய முடிகிறது. எனவே இயற்கையாக கடலிலிருந்து கிடைக்கும் சாதாரண கல் உப்பை பயன்படுத்துங்கள், அயோடின் சத்து குறைபாடு இருந்தால் அயோடின் கலந்த உப்பை பயன்படுத்துங்கள். இயற்கையோடு இணைந்து வாழ்பவர்களுக்கு நோய் வருவதில்லை! இயற்கைக்கு மாறாக நாம் எதைச் செய்தாலும் நிச்சயமாக நோய் வரும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்! ●



# ‘அகவை அறுபது’ ஊடக உலகில் உரிமையின் போராளி ‘தீக்கதிர்’ நாளிதழுக்கு

1962 மற்றும் 1963 காலங்கள் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சோதனை மிகுந்த ஆண்டுகள். சோசலிசப் பாதைக்கான இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் திட்டத்தை வடிவமைப்பதில் கம்யூனிஸ்ட் கட்சி பல சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்திய ஆளும் வர்க்கத்தினை மதிப்பீடு செய்து அதை எதிர்கொள்ளும் வகையில் புரட்சிகர அணி சேர்க்கையினை உருவாக்குவது தான் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பிரதான இலக்காக இருந்தது.

மேலும் இந்திய-சீன எல்லைப் பிரச்சனையில் போருக்கு செல்வதா அல்லது பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதா என்பது. ‘விவாதத்திற்கு உள்ளானபோது போருக்கு எதிரானவர்கள் சீன ஆதரவாளர் கள்’ என்று முத்திரை குத்தப்பட்டு கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒருபகுதி தலைவர்களும். ஊழியர்க ளும் காங்கிரஸ் அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு உள்ளானார்கள். இதனையடுத்தே 1964இல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது என்பது வரலாறு. இத்தகைய பின்புலத்தில் இருந்து தான் தீக்கதிர் 60 ஆண்டுகளுக்கு முன்பு தனது பயணத்தை துவக்கியது.

தமிழகத்தின் பெரும் செல்வந்தர்களது குடும்பத்தி னர் பத்திரிகை துவங்கிய அந்தக் காலத்தில், தொழி லாளர்கள் தங்களின் சொந்த ஊதியத்திலிருந்து சிறு தொகை வசூலித்து அதனையே பத்திரிகையின் மூல தனமாகக் கொண்டு ஒரு பத்திரிகை துவங்கிய தென்றால் அதுதான் தீக்கதிர்.

“கோவை நக ரத்தின் பிரதான தொழிற்சாலைகளான டெக்ஸ்டூல், பிஎஸ்ஜி மற்றும் எண்ணற்ற பஞ்சாலைகளில் பணியாற்றிய செங்கொடி சங்க தொழிலாளர்கள் பத்தி ரிகையின் அவசியத்தை உணர்ந்து அதற்கான நிதியை வசூலிக்க முடிவு செய்தனர். தொழிலா ளர்கள் மனமுவந்து நிதியளித்தனர். கோவையைச் சார்ந்த எல்.அற்புதசாமி என்கிற அப்பு பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

கோவை தொழிலாளர்கள் மத்தியில் பத்திரிகை வாசிப்பு முலம் உருவான இத்தகைய இடதுசாரி அரசியல் உணர்வுகள் தான் வலுவான இடதுசாரி தொழிற்சங்க இயக்கத்தை கட்டமைக்கவும், தொழி லாளர்கள் மத்தியில் கம்யூனிசத்தின் மீதான செல் வாக்கு விரிவடையவும் அடித்தளமாக அமைந்தது. 1967ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட பெரும் செல்வந்தர் பொள்ளாச்சி மகாலிங்கத்தை தொழிற்சங்கத் தலைவரான .ரமணி தோற்கடித்ததும் பின்னர் அடுத்த டுத்து நடந்த தேர்தல்களில் இடதுசாரி இயக்கத் தலைவர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்க ளாக தேர்ந்தெடுக்கப்பட்டதும் போன்ற சாதனைக ளுக்கு தொழிலாளர்கள் மத்தியில் மேலோங்கியிருந்த இடதுசாரி அரசியல் செல்வாக்கு ஒரு காரணமாகும். பின்னர், பத்திரிகை மதுரைக்கு மாற்றப்பட்ட பிறகு மதுரை அச்சகத்திற்கு கேரள தேசாபிமானியிலிருந்து ஒரு பழைய இயந்திரத்தை கேரள கட்சி கொடுத்தது.

தீக்கதிர் வாரப்பத்திரிகையிலிருந்து நாளிதழாக மாறிய பிறகு கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதி களில் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டது. பல புதிய தோழர்கள் முகவர்களாக இருந்து விநியோகம் செய்வற்கு மனமுவந்து முன்வந்த னர். பல பத்தாண்டு காலங்களுக்கும் மேலாக கடு மையான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தீக்கதிரை நாள் தவறாது விநியோகித்து வந்தனர். பல தோழர்க ளின் பெயருக்கு முன்னாள் தீக்கதிர் என்ற அடை மொழி காலப்பதிவாகவே பதிந்துவிட்டது. எழுதப் படிக்கத் தெரியாத பஞ்சாலை, சுமைப் பணித் தொழிலாளர்கள், சாயப்பட்டறை, விசைத்தறி தொழிலாளர்கள் தங்களின் ஓய்வு நேரங்களில் படிக்கத் தெரிந்த இளைஞர்களின் உதவியைப் பெற்று தீக்க திரை முழுமையாக படிக்கச் சொல்லி அரசியலை அறிந்து கொண்டனர். உறுதிமிக்க தொழிலாளர்க ளாக தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றியதற்கு தீக்கதிர் வாசிப்பு ஒரு நல்ல அடித்தளத்தை உரு வாக்கியது.

1993 ஆம் ஆண்டு தீக்கதிரின் முப்பதாண்டு விழா கோவையில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. தோழர்.இ.கே.நாயனார் பங்கேற்றார்.கலைவிழாவில் இயக்குநர் பாலுமகேந்திரா கலந்து கொண்டார். பல் லாயிரக்கணக்கானோர் குடும்பங்களுடன் கலந்து கொண்டனர். இந்த விழா தீக்கதிரின் விரிவாக்கத் திற்கு பெரிதும் உதவியாக அமைந்தது. 1990களுக்குப் பிறகு கோவையில் அடுத்தடுத்து நிகழ்ந்து வந்த வகுப்பு மோதல்களும். தொடர் குண்டு வெடிப்பும் அதைத்தொடர்ந்து முன்னுக்கு வந்த பதற்ற நிலைமைகளும் அறிவோம். இத்தகைய பதற்றமான தருணங்களில் தீக்கதிர் நாளிதழ் மக்களின் ஒற்று மையை முன்னிறுத்தி செய்திகளையும். அரசியல் பின்னணிகளையும் வாசகர்கள் மத்தியில் எடுத்துச் சென்றது. அமைதிக்கான முயற்சிகளுக்கு தீக்கதிர் தன்னுடைய பங்களிப்பை செய்தது. மக்கள் ஒற்றுமை மத நல்லிணக்கத்திற்கான ஆயுதமாக தீக்கதிர் உழைக் கும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது.

2001ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்து தொழிலா ளர் சங்கத்தின் வெள்ளிவிழாவையொட்டி சிஐடியு சேரன் போக்குவரத்து தொழிலாளர்கள் தங்களின் வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடனாக பெற்று பத்தாண்டு சந்தாக்களாக பொள்ளாச்சியில் நடை பெற்ற விழாவில் தோழர். எஸ்.ஏ.பெருமாளிடம் ரூ.2 லட்சத்திற்கும் அதிகமான தொகையினை வழங்கினர். இதேபோல ஈரோடு ஜீவா போக்குவரத்து தொழிலா ளர்களும் சந்தா வழங்கினர். ஐந்தாண்டு, பத்தாண்டு சந்தாக்களை வழங்குவதை ஊக்கப்படுத்தும் முயற்சி க்கு இது வித்திட்டது. இத்தகைய வளர்ச்சிப் போக்குகளே தீக்கதிரின் மூன்றாவது பதிப்பு கோவையில் துவங்கிட காரண மாகின. கோவையை மையப்படுத்தி ஒன்றுபட்ட கோவை மற்றும் சேலம் மாவட்டங்களை உள்ளடக்கி கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. பதிப்பு அலுவ லகத்திற்கான இடத்தை தீக்கதிர் நிர்வாகம் தேர்வு செய்யும் இடத்தை மாவட்டக் கட்சி வழங்கும் என்று சொன்னதோடு அதன்படி கட்சியின் கோவை கிழக்கு நகரக்குழு செயல்பட்டு வந்த புதிய கட்டிடத்தை தீக்கதிருக்கு வழங்கியது. தீக்கதிரின் வளர்ச்சிக்கு என முன்னுக்கு வரும் எந்தவொரு முயற்சிகளும் முன்னுரி மையாக கருதப்படுவதற்கு இது ஒரு நல்ல உதாரண மாகும்.

கோவை பதிப்பு துவங்கப்படுவதையொட்டி கட்சி அணிகள். தொழிலாளர்கள் மத்தியிலும் நல்ல உற்சா கத்தை ஏற்படுத்தியிருந்தது. கோவை, திருப்பூர் மாவட் டங்களில் ஆயிரத்திற்கும் மேலான சந்தாக்களை சேர்த்து பெரும் நிதியாக வழங்கப்பட்டது. குறிப்பாக ஈரோடு ஜீவா போக்குவரத்து தொழிலாளர்கள் சந்தா விற்காக ஊதியத்தின் ஒரு பகுதியை ஒதுக்கி 500 சந்தாக்களுக்கான தொகை ரூ.5 லட்சத்தை தோழர் பிரகாஷ் காரத்திடம் வழங்கினர். மதுரைப் பதிப்பிலி ருந்து வந்த பத்திரிகை எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்தது. சந்தா வழங்கியதோடு பதிப்பு துவக்க நாளன்று வெளியான சிறப்பு மலருக்கும் ரூ.20 லட்சம் வரையில் விளம்பரங்களை அளித்து தீக்கதிருக்கு மூல தனத்தை உருவாக்கிக் கொடுத்தவர்களில் பெரும் பகுதி உழைப்பாளி மக்கள் தான்.

திருப்பூர் மாவட்டம் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக வருடந்தோறும் ஆயிரக்கணக்கான

சந்தாக்க ளை சேர்த்தும், தீக்கதிருக்கு விளம்பரத்தை அளிப்ப தன் மூலம் தீக்கதிரின் வளர்ச்சிக்கு மகத்தான பங்க ளிப்பை செய்து வருவதையும் கட்சி அணிகளும், தீக்கதி ரின் ஆதரவாளர்களும் ஒரு கடமையாகவே கருதுகிறார் கள். கடந்த 2016ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்டக்குழு 'நம்ம திருப்பூர் நம்ம தீக்கதிர்' எனும் ஒரு மாத கால சிறப்பு விற்பனை இயக்கம் தீக்கதிர் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை படைத்தது. பல ஆயிரக்க ணக்கான புதிய வாசகர்கள் தீக்கதிருக்கு அறிமுக மாகினர். மக்கள் மத்தியில் பெரியளவில் தீக்கதிர் பிரச்சாரத்தை கொண்டு செல்ல முடிந்தது.தற்போது திருப்பூரில் மாவட்ட செய்தி பிரிவு துவக்கப்பட்டு செயல் பட்டு வருகிறது.

கடந்த 60 ஆண்டு காலத்தில் அரசியல் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. இன்றைய ஊடகங்களில் பெரும்பாலானவை பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் ஒருபகுதியாகவே இருக்கின்றன. அரசியல் சார்ந்த செய்திகளை தவிர்த்து தங்களின் நலன் சார்ந்த கருத்துக்களுக்கு ஊடகங்களை பயன்படுத்துகின்றன. கார்ப்பரேட்-மோடி கூட்டணியை எதிர்த்து ஒரு வலுவான அரசியல் சக்தியை உருவாக்கிட உழைக்கும் மக்களிடத்தில் தீக்கதிரை பரவலாக கொண்டு செல்வதே இன்றைய தேவை.இதன் மூலமே தொழிலாளி வர்க்க அரசிய லின் செல்வாக்கினை மீட்டெடுக்க முடியும்

ஜாக்டோ ஜியோ. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஏனைய துறைவாரி சங்கங்களின் முக்கிய போராட்டங்களை மற்ற ஊடகங்கள் வெளியிட முன்வராத நிலையில் தீக்கதிர் நாளிதழ் மட்டுமே நம் போன்ற சங்கங்களின் போராட்ட மற்றும் மாநாட்டு செய்திகளை வெளியிட்டு நாட்டில் உழைப்பாளர்கள் ஏன் போராடுகிறார்கள் அவர்களின் உரிமைகள் ஏன் மறுக்கப்படுகின்றன என்பனவற்றை மக்களுக்கும். அரசுக்கும் உணர்த்தி வருகிறது, 60 ஆண்டுகளைக் கடந்து வீரநடை பயிலும் தீக்கதிரை தினமும் வாசிப்போம். அனைவரையும் வாசிக்க வைப்போம் அனைவரும் தீக்கதிரின் சந்தாதார்ரக்ள வோம். உரிமைகள் குறித்து விழிப்புணர்வு பெற அலுவலக நண்பர்களிடமும் தீக்கதிரை கொண்டு சேர்ப்போம். ●

கவிதை

# யாதுமாகி நிற்பாய் தோழி!

**- ஆர்.நடராஜன்**

தோழி!

உன்

அறிவின் மேன்மை காணட்டும்!

ஆற்றலின் அற்புதம் அறியட்டும்!

உழைப்பின் வீரியம் உணரட்டும்!

உறுதியில் மடமைகள் நொறுங்கட்டும்!

சொல்லின் வலிமை விளங்கட்டும்!

செயலின் அருமை தெரியட்டும்!

நடையின் மிடுக்கு புரியட்டும்!

நிமிர்ந்த பார்வை ஆளட்டும்!

தலைமை பண்பை வியக்கட்டும்!

தகைசால் பண்பை போற்றட்டும்!

சாதனை வரலாறு படைக்கட்டும்!

தோழி......!

வெற்றி உன்னைச் சேரட்டும்!

# உரிமைகள் கனிவது இனியும் தடையானால் உடைத்தெறிவோம் நம் பொறுமைகளை!

**- மு.அன்பரசு**

ஜாக்டோ-ஜியோ வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டினை தொடர்ந்து உரிமை மீட்ப்பு இயக்கத்தை மேலும் கட்டமைத்து களம் காண வருகை புரிந்திருக்கும் போராட்டக்குழுவில் அங்கம் வகிக்கும் போராளிகளே! தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு போர் வீரர்களே! துறைவாரி / பிரிவுவாரி சங்கங்களின் தலைவர்களே! நிர்வாகிகளே! உங்கள் அனைவருக்கும் போராட்டக்குழுவின் சார்பில் புரட்சிகரமான வாழ்த்துக்களை உரித்தாக்கி வணங்கி வரவேற்று மகிழ்கின்றோம்.

தோழர்களே! சில நேரங்களில் நாம் நினைத்தபடி நடக்க வேண்டிய விஷயங்கள் சரியாக நடக்காத போது, நாம் கஷ்டப்பட்டுச் செல்லும் சாலை செங்குத்தான மலைமீது ஏறுவதாக தோன்றும்போது, நம் கையில் பணம் குறைவாக இருந்து கடன்கள் அதிகமாக இருக்கும்போது, நாம் புன்னகைக்க விரும்பி அது முடியாமல் போய் பெருமூச்சு விடுகிறபோது, கடமையும், பொறுப்புணர்ச்சியும் நம்மை கசக்கிப் பிழியும்போது – - தேவைப்பட்டால் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்ளலாமே தவிர முயற்சியை மட்டும் எப்போதும் விட்டுவிடக்கூடாது என்பது வெற்றிபெற்ற அறிஞர்களின் வாக்கு.

நாட்டில் அபார தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்கிறார்கள், பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற்றமடைந்து வருகிறது என்கிறார்கள். ஐடி தொழில் துறையில், விண்வெளி தொழில் நுட்பத்தில், பல்வேறு ஆராய்ச்சிகளில் இந்தியா வியத்தகு வளர்ச்சி அடைந்து வருவதாக மத்திய அமைச்சர்களும் அதிகாரிகளும் தெரிவிக்கிறார்கள். ஆனால் நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆகிய பிறகும் ஏழை எளிய மக்கள் குறைந்ததாக தெரியவில்லை. வறுமை நிலையில் தள்ளப்படுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருவதாகத்தான் செய்திகள் வருகின்றன. விண்ணை கிழிக்கும் வேகத்தில் விஷம்போல் ஏறிச்செல்லும் விலைவாசியை இந்த தொழில் நுட்பங்களால் குறைக்க முடியவில்லை. என்னதான் அதிநவீன தொழில்நுட்ப வளர்ச்சியை இவ்வுலகம் கண்டிருந்தாலும் ஒவ்வொரு வேளை உணவிற்கும் கையேந்தி நிற்கும் மனித குலத்தின் அவல நிலை இன்னும் மாறவில்லை.

இனி எத்தனை யுகங்கள் ஆனாலும் இது மாறப்போவதில்லை என்பது செல்வங்களை குவித்து வைத்திருக்கும் பணமுதலைகள் மற்றும் அதிகார வர்க்கங்களின் ஆணவத்திலிருந்து தெரிகிறது. நாகரீகம் தேவையில்லை முதலில் சகல ஜனங்களுக்கும் சோறு கண்டுபிடி என்று சொன்ன பாரதியின் வரிகள் இன்னும் சில நு}று ஆண்டுகளானாலும் பலிதமாகப்போவதில்லை என்பதைத்தான் இவை காட்டுகின்றன. இவற்றை மாற்றிக்காட்டிவிட வேண்டுமென்றுதான் நம்மைப்போன்ற அமைப்புகள் அரசாங்கங்களுக்கு எதிராக மக்களுக்கான உரிமைகளை உணவு, உடை, வாழ்விடங்களுக்காக போராடி வருகின்றன.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை 19 ஆண்டுகால பொறுமைகளை கட்டுக்கோப்பாக நாம் அடக்கி வைத்திருக்கிறோம். கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலேயே ஊதிய மாற்றம் மற்றும் ஊதிய முரண்கள் தொடர்பாக நாம் வைத்த கோரிக்கைகள் பலவும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே அடுத்த ஊதிய மாற்றம் 2016ல் நிகழ்ந்தது. அந்த ஊதிய மாற்றத்தை பெறுவதற்காக நாம் 21 மாதங்களாக போராடி வேலைநிறுத்தப் போராட்டம் வரை சென்று பிறகு அது நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு ஊதியமாற்றம் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றை இந்த உலகம் அறியும். ஊதிய மாற்றத்தில் ஏற்பட்ட குறைபாடுகளையும் 1.1.2016 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை வழங்க வேண்டி நாம் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அதற்கான

போராட்டங்களையும் நாம் மேற்கொண்டோம். செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக புதிய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டுவந்த மாநிலம் தமிழகமாக இருக்கட்டும் என்று ஏற்படுத்திய புதிய ஓய்வூதியத் திட்டத்தை நாம் 2003ம் ஆண்டிலிருந்து இன்றுவரை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். உரிமைக்காக போராடி வியர்வையும் உதிரமும் சிந்தி 1,76,000 பேரை ஒரே அரசாணையில் டிஸ்மிஸ் செய்த ஜெயலலிதா அரசை எதிர்த்து போராட்டம் நடத்தி உச்ச நீதிமன்ற தீர்ப்பின் வாயிலாக நீக்கப்பட்ட அனைவரும் திரும்பவும் பணியில் அமர்த்தப்பட்டதும், அரசு ஊழியர்களை வஞ்சித்த ஜெயலலிதா அரசை அடுத்த தேர்தலிலேயே வீட்டுக்கு அனுப்பியதையும் நாம் செய்து காட்டி பகை முடிக்கும் பணி முடித்தோம்.

ஆசிரியர்கள் வேலை ஏதும் செய்யாமலேயே சுளையாக ஐம்பதாயிரம் சம்பளம் வாங்குவதாகவும், அரசு ஊழியர்கள் அரசு கஜானாவின் நிலை உணர்ந்தும் வேலை நிறுத்தம் செய்வதாகவும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை கேவலமாக விமர்சித்த எடப்பாடி பழனிச்சாமி அவர்களையும் நடந்து முடிந்த தேர்தலில் வெறிகொண்டு பழிதீர்த்தோம்.

இருப்பினும் சென்ற பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தலில் நம்முடன் நின்று நமக்காக அறிக்கைகள் விட்டதோடு மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று சொன்ன திமுக தலைவரும் அன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாய் ஆகிவிட்ட நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதிகளை இன்னமும் நிறைவேற்றாமல் உள்ளது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் எடப்பாடி திரு. பழனிச்சாமி அவர்கள் பேசியதைப்போலவே இந்த திமுக ஆட்சியில் அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியும் சம்பள உயர்வும் அளிப்பது சமூக அநீதி என்று தன்னுடைய கார்ப்பரேட் விசுவாசத்தைக் காட்டியுள்ளார். அவர் சொன்ன வார்த்தைகளை திரும்பப் பெற வேண்டும் என்று நாம் ஊழியர் சந்திப்பு பிரச்சாரம் நடத்தி உரியதொரு எதிர்வினையாற்றினோம். அதன்பிறகு ஜூலை 2ஆம் நாள் எழுச்சிநாள் கருத்தரங்கம் நடத்தி தமிழக அரசின் கவனத்தை ஈர்த்தோம்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 23ஆம் தேதி கோட்டை நோக்கி பேரணி நடத்தி நம்முடைய நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்றிட முதல்வரிடம் முறையிட இயக்கம் நடத்திட தீர்மானித்தோம். அதனுடைய நீட்சியாக ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் பெயரில் அனைத்துத் துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக்குழுவின் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கத் தலைவர்கள் முதல்வர் முன்னிலையில் மேடையேறி தங்கள் கோரிக்கைகளை வாசித்தளித்து முதல்வரின் மௌனத்தை கலைத்ததோடு, ஏற்கெனவே நம்முடைய 14ஆம் மாநில மாநாட்டில் ஆட்சியாளர்களை திரும்பிப் பார்க்க வைப்போம் என்று சூளுரைத்ததை ஜாக்டோ-ஜியோ மாநாட்டில் முதல்வரை திரும்பி பார்க்க வைத்ததோடு மட்டுமல்லாமல் லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கூடியிருந்த கூட்டத்தில் திமுக அரசமைக்க காரணமாக இருந்தவர்கள் நாம் என்பதை முதல்வர் தன் வாயாலேயே கூற வைத்ததோடு நம்முடைய கோரிக்கைகளை தான் மறுக்கவில்லை என்றும் மறக்கவில்லை என்றும் மறைக்கவும் இல்லை என்றும் கூற வைத்து கோரிக்கைகளை முதல்வரின் வாய்மொழி மூலம் புதுப்பித்திருக்கிறோம். இப்போது கூறியுள்ள உறுதிமொழி முதல்வரால் கூறப்பட்டுள்ள உறுதிமொழியாகும். தீவுத்திடலில் தமிழக முதல்வர் எந்த கோரிக்கை குறித்தும் அறிவிப்பு வெளியிடாமல் போயிருந்தாலும் நம்முடைய நிலுவை கோரிக்கைகளை உறுதிபடுத்தி உயிர்பித்துள்ளார் என்பது நமக்கு கிடைத்துள்ள நம்பிக்கை செய்தியாகும்.

இதுகாலம் வரை நாம் பொறுமையுடன் காத்திருந்தது அரசின் நிதி நெருக்கடி மற்றும் கொரோனா பாதிப்புகளில் இருந்து தமிழகம் மீண்டுவர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்தானே தவிர உரிமைகளை கேட்பதில் எந்தவித பயமோ தயக்கமோ நாம் எப்போதும்

கொண்டது கிடையாது. இப்போது தீவுத்திடல் மாநாட்டில் முதல்வர் கண்டிப்பாக நமது கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என உறுதிமொழி அளித்துள்ள நிலையில் நாம் இப்போது அடுத்த கட்ட நகர்விற்கு அடியெடுத்து வைத்துள்ளோம். அதனால் 2024ஆம் ஆண்டு வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல்வரை இனி நாம் பொறுமை காக்க வேண்டிய அவசியமில்லை. இனி போராட்டகளம் நம் கையில். உரிமைகளை மீட்டெடுக்கும் வரை ஓய்வறியா போராட்டங்கள் தான் நமக்கிருக்கும் ஒரே வழியாகும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டிற்குப் பிறகு யாருமே எதிர்பாராத வகையில் 14 சதவீத அகவிலைப்படி உயர்வைப் பெற்றோம். அதன்மூலம் அரசின் கஜானாவிலிருந்து ஆண்டொன்றிற்கு 8724 கோடியை பெற்றுள்ளோம். இந்த உரிமை அரசால் வழங்கபட்டது என்பதை விட நம்முடைய தொடர் இயக்கங்களின் மூலம் அரசின் கரங்களிலிருந்து பறிக்கப்பட்டது என்று கூறுவதே சரியானதாக இருக்கும். அதேபோல ஜாக்டோ ஜியோ மாநாடு நடத்திய போதும் 3 சதவீத அகவிலைப்படி உயர்வை அரசின் கஜானாவிலிருந்து 1949 கோடியை பெற்றோம். நுhறு சதவீதம் நாம் நம்முடைய உரிமைகளை அடையவில்லை என்றாலும் கிடைத்திருக்கின்ற உரிமைகள் அனைத்தும் நம்முடைய தொய்வில்லாத தொடர் இயக்கங்களால் கிடைத்தவையாகும். அதுபோல இப்போது நடைபெறும் நம்முடைய பிரதிநிதித்துவ மாநாட்டின் மூலமாகவும் அரசிற்கு அழுத்தம் கொடுத்து நம்முடைய உரிமைகளை நாம் பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மீண்டும் மீண்டும் பொறுமை காத்தால் நாம் பொங்கி எழ வேண்டிய சூழலில்தான் உள்ளோம்.

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் நம்முடைய இருப்பை நிலைநிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பது. நாம் அனைவரும் நம்முடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறோம். அந்த சக்தி பெரு நெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்வார்கள். அதை உணர வைக்கக்கூடிய இடமாக நம்முடைய மாநில பிரதிநிதித்துவ பேரவையை அமைப்போம். ஆர்த்தெழுவோம். பொறுமை என்பது "கசப்பான தாவரத்திலிருந்து இனிப்பான கனி பெறுவதாகும்." அவற்றை பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இப்போதிருந்தே துவங்குவோம்.

உரிமைகள் கனிவது இனியும் தடையானால் வெடித்துச் சிதறத் தேவையில்லை. வீதியில் அணிவகுத்தால் போதும் வெந்து தணியும் நாடு!

அவர்கள்...
நின்றால் மனித சங்கிலி!
நடந்தால் பேரணி!
உட்கார்ந்தால் உண்ணாவிரதம்!
தலைதூக்கி கொடி உயர்ந்தினால் தர்ணா!
குரல்வளையிலிருந்து பீறிட்டெழும்
ஒலியே கோரிக்கை முழக்கம்!
இத்தனையையும் ஒன்றுசேர்ந்த
மொத்தம்தான் அரசு ஊழியர்!
தெரிகின்ற தலைகள் ஒவ்வொன்றும்
தேங்கி நிற்கும் அணுகுண்டு!
பொறுமையின் எல்லையாம்
பிரதிநிதித்துவப் பேரவையில்
காத்துக்கிடக்கும்
நெறிபிறழாத வெறிகொண்டு!
உரிமைகள் கனிவது
இனியும் தடையானால்
வெடித்துச் சிதறத் தேவையில்லை
வீதியில் அணிவகுத்தால் போதும்
வெந்து தணியும் நாடு!

தோழமை போராட்ட வாழ்த்துகளுடன் ! ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com